RE/MAX Realtron Blue Force
Team Blue Force
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
Direct 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 29, 09 செப்டம்பர் 2022 இதழ்:- 20

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

## இலங்கையில் மனிதஉரிமை மீறல்கள் இடம் பெற்ற இடங்கள் வரைபடத்தை வெளியிட்ட கனடா பொதுநல பரப்புரை நிலையம்

உள்நாட்டு மோதலின் போது ( 1983- 2009) இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம் பெற்ற பகுதிகளை சுட்டிக்காட்டும் வரைபடமொன்றை கனடாவை சேர்ந்த பொதுநல பரப்புரை நிலையம் **The Public Interest Advo cacy Centre** என்ற அமைப்பொன்று வெளியிட்டுள்ளது.

Public Interest Advocacy Centre

இலங்கையில் இடம் பெற்ற ஆயிரக்கணக்கான மனித உரிமை மீறல்களை திகதிகள் பாதிக்கப்பட்ட நபர்கள் அவர்களின் பெயர்கள் இடம் பெற்ற இடம் போன்ற விபரங்களுடன் தெரிவிக்கும் வகையில் இந்த வரைபடம் காணப்படுகின்றது.(7ம் பக்கம் பார்க்க)

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

## பொறுப்புக் கூறலுக்கு சர்வதேச பொறிமுறை! ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அழுத்தம்!



சர்வதேச சட்டங்களை பாரிய அளவில் மீறியவர்கள் துஸ்பிரயோகம் செய்தவர்களை அல்லது சர்வதேச மனிதாபிமான சட்டங்களை பாரியளவில் மீறியவர்களை இலக்கு வைத்து உலக நாடுகள் மேலும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்

நிலைமாற்றுக்கால நீதி மற்றும் பொறு ப்புக்கூறல் தொடர்பில் புதிய அரசாங்கம் பாதிக்கப்பட்டவர்களை அடிப்படையாக கொண்ட மூலோபாயத்தை முன்னெடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நம்பகத் தன்மை வாய்ந்த உண்மையை(3ம் பக்கம் பார்க்க)

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness I No medical Life
Disability Income I Mortgage Life
Travel & Visitor I Life Insurances
RRSP I RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## வெளி நாட்டுப் பொறிமுறையை அரசாங்கம் ஒரு போதும் ஏற்காது - வெளிவிவகார அமைச்சர்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் இணையனுசரணை நாடுகளால் முன் வைக்கப்படக்கூடிய அரசியலமைப்பிற்கு ஒவ்வாத எந்தவொரு வெளியகப் பொறிமுறையையும் தாம் ஏற்றுக் கொள்ளப்(6ம் பக்கம் பார்க்க)



## தமிழ் பகுதிகளில் சீனாவின் ஆர்வம்?

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX Royal Properties
Mortgage Alliance

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial





## Team SIVA WILL BRING THE BEST RESULTS!


**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com

HOMELIFE HIGHER STANDARDS


**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
**Bus: 416.298.3200**
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6


*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT




• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Lawrence / Morningside



**Scarborough $508,000**
Bedrooms: 3 Washrooms: 2
Shops 24 Hours Bus Route

### Sheppard & Warden




**Oshawa $595,900**
Bedrooms: 2+1 Washrooms: 2
Fully Renovated Suite

### Kennedy /Progress




**Scarborough $548,000**
Bedrooms: 2 Washrooms: 1
Ground Floor Unit, Great Location

### Hurontario/Hillcrest




**Mississauga $599,900**
Bedrooms: 2+1 Washrooms: 1
Renovated Washroom

### 40 New Delhi Dr



**Markham $599,999**
2 Floor Commercial Unit With 2
Washrooms & Separate Entrances

### Markham & Eglinton




**Scarborough $589,900**
Bedrooms: 2 Washrooms: 2
Steps To All Amenities; Schools

### King St West/John St




**Toronto $679,900**
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept, 9 Ft Ceilings

### William St N & Elgin St



**Kawartha Lakes $799,900**
Bedrooms: 6 Washrooms: 3
Attention Investors!

### Highway 535/Island Rd



**Sudbury $899,000**
Bedrooms: 3+1 Washrooms: 2
The Waterfront Property

### Church St/Rossland Rd



**Ajax $999,949**
Bedrooms: 3 Washrooms: 3
Brand New Luxury Townhome

### Conlin Rd & Simcoe St



**Oshawa $1,139,000**
Bedrooms: 3+2 Washrooms: 4
Sep/Entrance To A Finished Bsmt

### Pharmacy/Lawrence




**Scarborough $1,219,000**
Bedrooms: 3+1 Washrooms: 2
Separate Entrance To Basement

### Donald Cousens / 16th Ave



**Markham $1,499,999**
Bedrooms: 4+2 Washrooms: 4
Approx. 2520 Sq Ft

### 401 & Mccowan



**Scarborough $599,900**
Bedrooms: 2 Washrooms: 2
Minutes To 401, STC, Go Station

### Edenbrookhill / Sandalwood

FOR LEASE



**Brampton $1,800**
Bedrooms: 2 Washrooms: 1
Basement Apartment for Rent

### Midland & Danforth

FOR LEASE



**Scarborough $1,600**
Bedrooms: 2 Washrooms: 1
Basement for rent, Just Renovated

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# பொறுப்புக் கூறலுக்கு சர்வதேச பொறிமுறை! ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அழுத்தம்!



சர்வதேச சட்டங்களை பாரிய அளவில் மீறியவர்கள் துஸ்பிரயோகம் செய்தவர்களை அல்லது சர்வதேச மனிதாபிமான சட்டங்களை பாரியளவில் மீறியவர்களை இலக்குவைத்து உலக நாடுகள் மேலும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்

நிலைமாற்றுக்கால நீதி மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பில் புதிய அரசாங்கம் பாதிக்கப்பட்டவர்களை அடிப்படையாக கொண்ட மூலோபாயத்தை முன்னெடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நம்பகத்தன்மை வாய்ந்த உண்மையை கண்டறியும் பொறிமுறை தற்காலிக சிறப்பு நீதிமன்றம் போன்ற ஏற்கனவே வழங்கப்பட்ட வாக்குறுதிகளை காலவரையறைக்குட்பட்ட விதத்தில் நடைமுறைப்படுத்துவதற்கான திட்டம் அவசியம் எனவும் தெரிவித்துள்ளார்.

அனைத்து பொறுப்புக்கூறல் மற்றும் நிலை மாறுகால நீதிப்பொறி முறைகளை வடிவமைத்து செயற்படுத்துவதில் பாதிக்கப்பட்ட மக்களிற்கு முக்கிய பங்கினை வழங்கவேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் தனது அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த உண்மையை வெளிப்படுத்தும் விடயத்தில் போதிய முன்னேற்றம் காணப்படாதது குறித்து கவலை வெளியிட்டுள்ள மனித உரிமை ஆணையாளர் சர்வதேச பங்களிப்பு பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளின் முழுமையான பங்களிப்புடன் சுயாதீன வெளிவிவகார விசாரணைக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

பாரிய மனித உரிமை மீறல்கள் துஸ்பிரயோகங்களிற்கு காரணமானவர்களை பொறுப்புக்கூறச் செய்வதற்கான பாதிக்கப்பட்டவர்களிற்கு உண்மை நீதி மற்றும் இழப்பீடுகளிற்கு உள்ள உரிமையை உறுதி செய்வதற்கான வலுவான நிலைமாற்றுகால நீதிப்பொறிமுறையை முன்னெடுப்பதற்கு இலங்கையின் தொடர்ந்து வந்த ஆட்சியாளர்கள் தவறி விட்டனர் என மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை தெரிவித்துள்ளது. மாறாக இலங்கையின் ஆட்சியாளர்கள் பொறுப்புக்கூறலிற்கான தடைகளை உருவாக்கியுள்ளனர்,மேலும் போர்க்குற்றங்களில் தொடர்புபட்டனர் என நம்பகதன்மை மிக்க விதத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்களை அரசாங்கத்தின் உயர்மட்டத்தில் இணைத்துள்ளனர் எனவும் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை தெரிவித்துள்ளது.

தேசிய அளவில் பொறுப்புக்கூறல் தொடர்பில் முன்னேற்றம் ஏற்படாத பட்சத்தில் இலங்கையில் சர்வதேச சட்டத்தின் கீழ் இழைக்கப்பட்ட குற்றங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வழக்கு தொடர்வதற்கு அயல்நாட்டு மற்றும் சர்வதேச நியாயாதிக்கத்தின் கீழ் கிடைக்ககூடிய வழிமுறைகளை பயன்படுத்துவதற்கு நாடுகள் ஒத்துழைக்க வேண்டும் எனவும் மனித உரிமை ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சர்வதேச சட்டங்களை பாரிய அளவில் மீறியவர்கள் துஸ்பிரயோகம் செய்தவர்களை அல்லது சர்வதேச மனிதாபிமான சட்டங்களை பாரியளவில் மீறியவர்களை இலக்குவைத்து உலக நாடுகள் மேலும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# ஐக்கிய நாடுகள் மனிதஉரிமை ஆணையாளர் ஸ்ரீலங்கா அரசுக்கு விடுத்துள்ள அவசர வேண்டுகோள்!

மனித உரிமைகள் நல்லிணக்கம் ஆகியவற்றில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கம் தேசிய பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் கடந்த கால மீறல்கள் மீண்டும் இடம் பெறாமலிருப்பதற்கா பொறுப்புக ˙கூறல் மற்றும் ஆழமான சீர்திருத்தங்கள் ஆகியவற்றை முன்னெடுக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜெனீவா அமர்வில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் இடம்பெற்றுள்ளது.

இலங்கை தனது அரசியல்வாழ்வின் மிக முக்கியமான தருணத்தில் உள்ளது என்பதை ஏற்றுக் கொண்டுள்ள அறிக்கை இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடியின் மத்தியிலும் உள்ளது அது அனைத்து பிரிவு மக்களினதும் மனித உரிமைகளில் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளது.

இது பரந்துபட்ட சீர்திருத்தம் மற்றும் பொறுப்புக் கூறலிற்கான வேண்டுகோள்களை இலங்கையின் அனைத்து தரப்பு மக்களிடமிருந்தும் உருவாக்கியுள்ளது, இதனால் நாட்டை புதிய பாதையில் கொண்டு செல்வதற்கான வாய்ப்பு அரசாங்கத்திற்கு கிடைத்துள்ளது எனவும் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை தெரிவித்துள்ளது.

பேண்தகு முன்னேற்றங்கள் நிகழ்வதற்கு கடந்தகால மற்றும் தற்போதைய மனித உரிமை மீறல்களிற்கு தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்பட்டமை பொருளாதார குற்றங்கள் மற்றும் ஊழல்கள் போன்ற அடிப்படை காரணிகளை ஆராய்ந்து அவற்றிற்கு தீர்வை காண்பது அவசியம் எனவும் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சவால்களிற்கு தீர்வை காண்பதற்கும் கடந்த காலமீறல்கள் மீண்டும் நிகழாமலிருப்பதற்கும் அடிப்படை மாற்றங்கள் அவசியம் என மனித உரிமை ஆணையாளர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மிகமோசமான பாதுகாப்பு சட்டங்களை ஆர்ப்பாட்டக்காரர்களை கைது செய்வதை இராணுவ மயமாக்கலை நோக்கி நகர்வதை அரசாங்கம் முடிவிற்கு கொண்டு வரவேண்டும், பாதுகாப்பு சீர்திருத்தங்கள் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களித்தலை முடிவிற்கு கொண்டு வருதல் போன்றவை குறித்த புதுப்பிக்கப்பட்ட அர்ப்பணிப்பையும் செயற்பாடுகளையும் வெளிப்படுத்த வேண்டும் எனவும் மனித உரிமை ஆணையாளர் தனது அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை இலங்கைக்கு எதிராக முதல் தடவையாக பொருளாதார மோசடி குற்றச்சாட்டை வைத்திருக்கின்றது. இதற்கு முன்னர் ஒரு போதும் இவ்வாறான குற்றச்சாட்டு இலங்கைக்கு தெரிவித்ததில்லை என எதிர்க்கட்சி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் 06 ஆம் திகதி இடம் பெற்ற பிள்ளைகள் தாய்மாரின் மந்த போசணை தொடர்பாக யுனிசெப் நிறுவனம் விடுத்திருக்கும் அறிக்கை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே தெரிவித்துள்ளார்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**


# யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் மக்கள் குடியிருக்க காணி இல்லை! 1840 ஏக்கர் காணியை இராணுவத்திற்கு வழங்க நடவடிக்கை?



யாழ்ப்பாணத்தில் 14000 பேருக்கும், கிளிநொச்சியில் 4000 பேருக்கு குடியிருக்க காணிகள் இல்லாத நிலையில் பளையில் காணி சீர்திருத்த ஆணைக் குழுவுக்கு சொந்தமான 1840 ஏக்கர் காணியை இராணுவத்திற்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரன் குற்றம் சாட்டினார்.

பாராளுமன்றில் 06ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற பிள்ளைகள் மற்றும் தாய்மாரின் மந்தபோஷனை தொடர்பில் யுனிசெப் நிறுவனம் வெளியிட்டிருக்கும் அறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற் கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

யாழ்ப்பாணத்தில் 14000 பேருக்கு குடியிருக்க காணிகள் இல்லை. கிளிநொச்சியில் 4000 பேருக்கு குடியிருக்க காணிகள் இல்லை .தெருக்களில் இருக்கின்றார்கள், உறவினர், நண்பர்களின் காணிகளில் இருக்கின்றார்கள்.

என்னுடைய காரியாலயத்துக்கு தினசரி குறைந்தது 10 பேர் காணி கேட்டு வருகின்றார்கள். இவ்விடயம் தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநருக்கு 4 தடவைகள் கடிதம் எழுதினேன்.

பளையில் காணி சீர்திருத்த ஆணைக் குழுவுக்கு சொந்தமான 1840 ஏக்கர் காணியில் ஒவ்வொருவருக்கும் அரை ஏக்கர் வழங்குங்கள்.

அவர்கள் தொழில் செய்து அந்த இடத்தில் இருப்பதை உறுதிப்படுத்துங்கள். அவை குடிநீர் உள்ள இடம், தோட்டம் செய்யக்கூடிய நிலம் . எனவே காணி இல்லாதவர்களுக்கு வழங்குங்கள் எனக்கூறினேன்.

மறுபுறம் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபருக்கு கடிதம் எழுதினேன். பச்சிலைப்பள்ளி பிரதேச செயலருக்கு கடிதம் எழுதினேன். ஆனால் இதுவரை எதுவும் நடக்கவில்லை. யாருக்கும் ஒரு துண்டு காணி வழங்கப்படவில்லை.

இந்நிலையில் பளையில் உள்ள 1840 ஏக்கர் காணியை காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணி என்ற அடிப்படையில் இராணுவத்திற்கு கொடுப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு அமைச்சரவை அனுமதிக்கு சமர்ப்பிப்பதற்கான முழு முஸ்தீபுகளும் மேற் கொள்ளப் பட்டுள்ளன.

இராணுவம் தோட்டம் செய்வதற்கு கொடுக்கின்றார்கள். பலாலியில் தனியாரின் 3500 ஏக்கர் காணியில் இராணுவம் தோட்டம் செய்கின்றது.

வட்டக்கச்சியில் அரச காணியில் இராணுவம் தோட்டம் செய்கின்றது. இராணுவத்துக்கு காணி கொடுத்தால் இலங்கையின் போஷாக்கு மட்டம் எழும்பி விடுமா? கொஞ்சமாவது மூளையை பயன்படுத்துங்கள் என்றார்.

## இலங்கையை மஞ்சள் பட்டியலுக்கு மாற்றிய கனடா


இலங்கைக்கு விஜயம் செய்யும் தமது பிரஜைகளுக்கு விதித்திருந்த பயண ஆலோசனையை கனேடிய அரசாங்கம் புதுப்பித்துள்ளது. அதற்கமைய செம்மஞ்சள் பட்டியலில் இருந்த இலங்கையை மஞ்சள் பட்டியலுக்கு கனடா மாற்றியுள்ளது.

அத்தியாவசியமற்ற பயணங்களைத் தவிர்த்தல் என்பதிலிருந்து அதிக அளவு எச்சரிக்கையுடன் செயற்படவும் என்னும் அறிவுறுத்தலுக்கு அமைய இலங்கைக்கான பயணத்தின் ஆபத்து நிலை குறைவடைவதை இந்த மாற்றம் சுட்டிக் காட்டுகிறது.

எரிபொருள், உணவு, மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகளுக்கு இன்னும் தட்டுப்பாடு நிலவும் நாட்டில் பொருளாதார நெருக்கடி இன்னும் நீடிப்பதால், இலங்கை பச்சை பட்டியலில் இடம் பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஓகஸ்ட் மாதத்தின் இறுதியில், பிரான்ஸ், சுவிட்ஸர்லாந்து, இங்கிலாந்து மற்றும் நோர்வே உட்பட பல ஐரோப்பிய நாடுகள் இலங்கைக்கான பயண ஆலோசனைகளை தளர்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin



ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

அம்பாள் அடியார்களே!

புரட்டாதிச் சனி விரத நாட்கள்

17,24 செப்டம்பர் 2022 மற்றும்

01,08,15 ஒக்டோபர் 2022 நாட்களாகும்.

17 செப்டம்பர் 2022 1வது சனி விரத உபயம்:- தியாகராஜா யமுனாராணி குடும்பம்

ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய அங்கத்தவர்களுக்கான வருடாந்த மகாசபைப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 16 ஒக்டோபர் 2022 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு ஆலய கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. முக்கிய விடயமாக ஆலய இருப்பிடம் சம்பந்தமான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. இவ்வருடத்திற்கான அங்கத்துவப் பணம் செலுத்தாதவர்கள் பணத்தினைச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# பீல்ட் மார்ஷலின் அரசியல் அறியாமை!

இலங்கை இராணுவத்தில் பீல்ட் மார் ஷல் என்ற அதி உயர் பதவியை அடைந்தவரே சரத் பொன்சேகா. கடந்த வாரம் அவர் பாராளுமன்றில் உரையாற்றிய போது தற்சமயம் நாட்டில் அரச பயங்கரவாதம் நிலவுவதாக குறிப்பிட்டிருந்தார். தமது இராணுவ பதவிக் காலத்தில் பெரும் பகுதியை தமிழீழவிடுதலைப் புலிகளுக்கு எதிரான போராட்டத்திலேயே கழித்தவர் பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா.

இலங்கையில் ரோஹண விஜயவீர தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சி எழுபதுகளின் ஆரம்பத்தில் வெடித்த போது ஓர் இளநிலை அதிகாரியாக இராணுவத்தில் பதவி வகித்தவர் பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் சரத் பொன்சேகாவும் இராணுவத்தில் ஒரே தராதரத்தில் பணியாற்றியிருந்தனர். ஆனால், காலப்போக்கில் யுத்த காலத்தில் வடக்கு - கிழக்கில் பணியாற்றிய போது, அந்த யுத்தம் ஒரு கிளர்ச்சிப்படையுடனான யுத்தம் என்று குறிப்பிடுவதை விட இரு நாட்டு இராணுவத்துக்கு இடையிலான யுத்தம் என்று குறிப்பிடுமளவுக்கு இரு தரப்புமே ஆளணிகளின் பெருக்கத்துடனும் நவீன ஆயுத தளபாடங்களின் பாவனையோடும் களமிறங்கியிருந்தன.

இலங்கையின் வடக்கு - கிழக்கு யுத்தம் குறித்து அபிப்பிராயங்களை வெளியிட்டிருந்த உள்நாட்டு, வெளிநாட்டு இராணுவ ஆய்வாளர்கள், இலங்கை இராணுவத்துக்கு முன்பதாகவே பல நவீன சுடு படைக்கலங்களை தமிழீழ விடுதலைப் புலிகள் பெற்றிருந்தனர் என்று குறிப்பிட்டிருந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தின் போது கைப்பற்றப்பட்டு வந்தஆயுதத் தளபாடங்களை தொடர்ந்தே இலங்கையின் ஆயுதப் படைகள் தம்மை நவீன மயப்படுத்தும் விதத்தில் சர்வதேச ரீதியிலானஆயுதக் கொள்வனவில் ஈடுபட ஆரம்பித்தனர் எனவும் இராணுவ ஆய்வாளர்கள் கூறியிருந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இலங்கையின் பல அனுபவமிக்க படை அதிகாரிகள் போரிட்டமை ஒரு புறமிருக்க, அந்த அனுபவத்துடனேயே அவர்கள் தமது இராணுவ வாழ்க்கையில் பல உயர்வுகளைப் பெற்றுமிருந்தனர். அவர்களில் ஒருவரே பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா என்பதும் குறிப்பிடத்தக்கது.

இருந்தபோதிலும் தமிழீழ விடுதலைப்புலிகளோடு நேருக்கு நேர் மோதிய பல சிரேஷ்ட ஆயுதப் படை தளபதிகள் அவர்களின் போராடும் திறன் - யுத்த வியூகங்கள் என்பவற்றை பாராட்டியுமிருந்தனர்.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஒரு தடவை பாராளுமன்றில் உரையாற்றிய போது தாம் இராணுவத்தின் அதிஉயர் பதவியான பீல்ட் மார்ஷல் பதவியை வெறுமனே பெற்றிருக்கவில்லை எனவும் ஒரு மிகப்பலம் வாய்ந்த எதிரியுடன் போரிட்டே பெற்றுக் கொண்டாரெனவும் தெரிவித்திருந்தார்.

எனவே தமிழீழ விடுதலைப் புலிகளின் போர்த் திறனைப் பாராட்டிய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா.



முன்னாள் நீதியரசரும் முதலமைச்சருமான சி. வி. விக்னேஸ்வரன் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடையை நீக்குமாறு கோரியதைக் கண்டித்துள்ளதோடு விக்னேஸ்வரனின் கோரிக்கையை பைத்தியகாரத்தனமானது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

புலம்பெயர் அமைப்புகள் மீதான தடையை நீக்கியது போல தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையையும் நீக்க வேண்டுமென்றே சி. வி. விக்னேஸ்வரன் கூறியிருந்தார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, நீதியரசர் சி. வி.விக்னேஸ்வரனை சாடியுள்ளதை நோக்கும் போது அரசியல் ரீதியான அறிவு பொன்சேகாவிடம் துளியளவும் இல்லை என்பதையே அறிய முடிகின்றது.

புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என்பதை பொன்சேகா அறிந்து கொள்ள வேண்டியவராகின்றார். புலம்பெயர் அமைப்புகள் மீதான தடையை அரச தரப்பு நீக்கியுள்ளமை அவர்கள் மீதான நல்லெண்ணம் காரணமாகவோ அல்லது அரசியல் தீர்வொன்றின் மீதான நம்பிக்கை காரணமாகவோ அல்லஎன்று கொள்ள முடியாது.

புலம்பெயர் அமைப்பிலுள்ளவர்கள் அரசியல், பொருளாதார ரீதியாக பெரிதும் செல்வாக்கு படைத்தவர்களாக இருக்கின்றனர். எனவே, தற்போது நாடு பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள தருணத்தில் அவர்களுடனான தொடர்புகள் நாட்டுக்கு நன்மை பயக்கும் என்ற ரீதியிலேயே அரசதரப்பு அவர்களோடு தொடர்புகளை நாடி நிற்கின்றது.

இந்த நிலையில் விக்னேஸ்வரன் குறிப்பிட்டது போல தமிழீழ விடுதலைப் புலிகள்மீதான தடையும் நீக்கப்படும் பட்சத்தில் இலங்கையில் வடக்கு - கிழக்கு பிரச்னைக்கான தீர்வையும் காத்திரமாக்க முடியும். இதனை கருத்தில்கொண்டே விக்னேஸ்வரன் தமிழீழ விடுதலை புலிகள்மீதான தடையை நீக்கவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தருணத்தில் சரத் பொன்சேகா அறிந்து கொள்ள வேண்டியது என்னவெனில் பொருளாதார ரீதியான உதவிகளுக்கு புலம் பெயர்ந்த அமைப்புகள் முன்வர முடியும். அரசியல் தீர்வு முயற்சிகள் என்று ஆரம்பிக்கும் போது புலம்பெயர்ந்தோரும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு தவிர்க்கமுடியாத சக்தி என்று குரல் கொடுப்பார்கள் என்றே அறிந்து கொள்ள வேண்டியவராகின்றார்.

# வடக்கு கிழக்கை தனி நாடாக்க அமெரிக்கத்தூதுவர் சதியாம்! இனவெறியைக் கக்கும் இடதுசாரி வாசுதேவ நாணயக்கார



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை தனி இராச்சியமாக்கி அங்கு அமெரிக்காவின் ஆதிக்கத்தை நிலைநாட்டுவது இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கின் நோக்கம் என கடுமையாக குற்றஞ் சாட்டிய இடதுசாரி ஜனநாயக முன்னணியின் தலைவரும் எதிர்க்கட்சியின் சுயாதீன உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார, அமெரிக்க தூதுவர் மீதான தமது கடுமையான கண்டனத்தை பாராளுமன்றில் தெரிவிப்பதாகவும் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றில் 01 செப் 2022 வியாழக்கிழமை இடம் பெற்ற இடைக்கால வரவு செலவு திட்டத்தின் மீதான இரண்டாவது நாள் விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.


இலங்கையின் உள்ளக நிர்வாகத்தில் அமெரிக்க தூதுவர் ஜூலி சங் ஏன் தலையிடுகிறார். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தை தனி இராச்சியமாக மாற்றியமைக்கும் விடயதானத்தை அமெரிக்க தூதுவர் பொறுப்பேற்றுள்ளார். இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையிட அமெரிக்க தூதுவருக்கு அதிகாரமில்லை.

காலி முகத்திடல் போராட்டத்திற்கு அமெரிக்க தூதுவர் ஒத்துழைப்பு வழங்கினார். முன்னாள் கோட்டபய ராஜபக்ஷவை போராட்டத்தின் ஊடாக விரட்டினார், ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றார். தற்போதும் அமெரிக்க தூதுவர் போராட்டத்திற்கு அனுசரனை வழங்குகிறார்.

இலங்கையில் போராட்டத்தை உருவாக்கும் முயற்சியில் அமெரிக்க தூதுவர் ஈடுபடுகிறார். அதற்காக நிதி செலவு செய்யப்படுகிறது. வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு பிறிதொரு இராச்சியத்தை பெற்றுக்கொடுக்க அமெரிக்க தூதுவர் முயற்சிப்பது தமிழ், முஸ்லிம் மக்களுக்காக அல்ல, அது அமெரிக்கா, இலங்கையை பலவீனப்படுத்தி, இராச்சியமாக வேறுப்படுத்தி எம்.சி.சி. ஒப்பந்தந்தை செயற்படுத்தும் நோக்கம் அமெரிக்காவுக்கு உண்டு.

இலங்கையை யுத்த தளமாக மாற்றியமைக்கும் தேவை அமெரிக்காவுக்கு உண்டு அமெரிக்கா தூதுவர் ஜூலி சங்கிற்கு பாராளுமன்றில் எமது எதிர்ப்பை வெளிப்படுத்துகிறோம். இதனை பாராளுமன்ற ஹன்சாட்டில் பதிவு செய்யுங்கள் என்றார்.

# ஜெனிவா அரசியல்?



மீண்டும் ஜெனிவாவுக்கு போகும் அரசியல் சுற்றுலா ஆரம்பித்திருக்கின்றது. 2012இல் இலங்கை மீதான அமெரிக்க பிரேரணை கொண்டு வரப்பட்டது. இதனைத் தொடர்ந்து பல பிரேரணைகள் இலங்கைமீது நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இந்தப் பிரேரணைகளை மேற்குலக ஆதரவு பிரேரணைகள் என்றும் கூறலாம். ஏனெனில் இதுவரை நிறைவேற்றப்பட்ட அனைத்து பிரேரணைகளும் மேற்குலகின் தலையீட்டின் காரணமாகவே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. மேற்குலக தாராளவாத நாடுகளின் ஆதரவில்லாது போனால் இலங்கை மீதான பிரேரணைகள் விவகாரம் எப்போதோ முடிந்து போன விடயமாகியிருக்கும்.

2012இல், அமெரிக்க பிரேரணை நிறைவேற்றப்பட்ட காலத்திலிருந்து ஈழத் தமிழ்த் தேசிய அரசியலில் ஜெனிவா என்னும் சொல்லும் புதிதாக சேர்ந்து கொண்டது. அதுவரையில் தாயகம், தேசியம், சுயநிர்ணயம் போன்ற சொற்கள் போன்று, ஜெனிவா விடயமும் பிரதானமான ஒன்றானது. ஒவ்வோர் ஆண்டும் ஜெனிவாவுக்கு செல்வதை ஒரு கடமையாகவே சில அரசியல் வாதிகளும், புலம்பெயர் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பின்பற்றி வருகின்றனர்.

ஆனால், இவர்கள் அங்கு சென்று எவ்வாறான விடயங்களை முன்னெடுக்க முடிந்தது என்பதை உற்று நோக்கினால், குறிப்பிட்டுச் சொல்ல எதுவுமிருக்காது. ஏனெனில், தமிழ் அரசியல்வாதிகள் தலையிடுவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் அரிதானவை. ஒருவேளை கருத்துக்களை கூறுவதற்கான வாய்ப்புக் கிடைத்தாலும் கூட, ஒரு சிவில் சமூக பிரதிநிதியாகவே அங்கு பேச முடியும். கடந்த பத்து வருடங்களாக ஜெனிவாவுக்கு சென்று வந்தவர்கள் அனைவருமே சிவில் சமூக பிரதிநிதிகளுக்கான சொற்ப நிமிடங்களில் உரையாற்றிவர்கள் தான். ஏனெனில், அரசியல்வாதிகளாக மனித உரிமைகள் பேரவையில் பங்குெ காள்ள முடியாது. ஆனால், பக்க நிகழ்வுகளை மேற்கொள்ளலாம். இது மனித உரிமைகளுக்கான 'லொபி' என்னும் வகைக்குள் அடங்கும்.

ஆனால், இதனையும் தமிழ்த் தரப்புக்கள் ஒரு பொது நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் முன்னெடுக்கவில்லை. இன்றுவரையில் தாயக மற்றும் புலம்பெயர் அமைப்புக்கள் அனைவரும் ஒரு புள்ளியில் சந்திப்பதற்கான ஒரு வேலைத்திட்டம் வகுக்கப்படவில்லை.

அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரையில் தங்களுடைய தேர்தல் அரசியலுக்கான மூலதனமாகவே ஜெனிவாவைப் பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்கின்றன. இதன் காரணமாகவே பல கடிதங்கள் ஆண்டுகள் தோறும் அனுப்பி வைக்கப்படுகின்றன. மறுபுறமாக, ஜெனிவா மூலமான இதுவரையான அரசியல் தாக்கங்களை நோக்கினால், தமிழர்கள் எதிர்பார்த்த விளைவுகளைத் தரவில்லை. ஆகக் குறைந்தது அதற்கான வலுவான அழுத்தங்களையும் இலங்கை மீது திரட்சி பெறச் செய்ததாகவும் கூறி விட முடியாது.

ஆனால், இலங்கைத்தீவை சர்வதேச ரீதியில் பேசு பொருளாக பேணிக் கொண்டிருப்பதில் ஜெனிவா தலையீடுகளே பிரதான காரணமாகும். ஆனால், இதற்கான உரிமையை பங்குபோடுவதில் நமது அரசியல் கட்சிகள் முட்டி மோதிக் கொள்வது நகைச்சுவையானது. தமிழ் கட்சிகள் அமைதியாக இருந்தாலும் கூட, ஜெனிவா அழுத்தங்களை முற்றிலுமாக நீர்த்துப்போக அமெரிக்காவும் மேற்குலகும் அனுமதிக்கப் போவதில்லை. ஆனால், இந்த அழுத்தங்கள் ஏற்ற இறக்கங்களை கொண்டவை என்பதை தமிழ்த் தேசிய தரப்புக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அண்மையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஜெனிவா அழுத்தங்கள் வெற்றியளிக்கா விட்டால் இந்தியாவும் மேற்குலக நாடுகளும் தான் காரணமென்று தெரிவித்திருந்தார். சர்வதேச அரசியலையும் அதன் இயங்கு நிலையையும் சரிவரப் புரிந்துகொள்ள முடியாமை தான் இவ்வாறான வெளிப்பாடுகளுக்கான காரணமாகும்.

இலங்கை மீதான அழுத்தங்கள் என்பவை தமிழ் மக்களின் பிரச்னைகளில் சர்வரோக நிவாரணியல்ல. ஆனால், குறித்த அழுத்தங்கள் சில வாய்ப்புக்களை தரக் கூடியவை. ஆனால், அந்த வாய்ப்புக்கள் கிடைக்கின்ற போது, அதனைப் பயன்படுத்தி நன்மையடைவதற்கு தமிழர் தரப்பு தயாராக இருக்க வேண்டும். அந்த நன்மை என்பது ஒட்டுமொத்த நன்மையாக ஒரு போதுமே இருக்காது. படிப்படியாகத் தான் தமிழர்கள் முன்னகர முடியும். எனவே, ஜெனிவா அழுத்தங்கள் என்பவை படிப்படியாக முன்னகர்வதற்கான ஒரு துருப்புச்சீட்டு மட்டுமேயாகும்.

# வெளி நாட்டுப் பொறிமுறையை அரசாங்கம் ஒரு போதும் ஏற்காது - வெளிவிவகார அமைச்சர்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் இணையனுசரணை நாடுகளால் முன் வைக்கப் படக்கூடிய அரசியலமைப்பிற்கு ஒவ்வாத எந்தவொரு வெளியகப் பொறிமுறையையும் தாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று சுட்டிக் காட்டியுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனைக்கு அமைவாக பாதிக்கப் பட்ட தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய உண்மையைக் கண்டறியும் பொறி முறையொன்றை உருவாக்கி, அதனைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 12 ஆம் திகதி ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ள நிலையில், இது குறித்த இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு மற்றும் அடுத்தகட்ட நகர்வுகள் தொடர்பில் கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சில் திங்கட்கிழமை (5) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் அலி சப்ரி தெளிவுபடுத்தினார். அதன்போது அவர் கூறிய முக்கிய விடயங்கள் வருமாறு:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத் தொடரின் போது சர்வதேச நாடுகளுடன் இரு தரப்பு மற்றும் பல் தரப்புத் தொடர்புகளைப் பேணுவதற்கும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களுக்கு எமது நாட்டின் அரசியலமைப்பிற்கு உட்பட்டு அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கும் தயாராக இருக்கின்றோம். அரசியலமைப்பிற்கு அப்பாற்பட்டு எம்மால் எந்தவொரு தீர்வையும் பெற்றுக் கொடுக்க முடியாது என்பதுடன் அதற்கான அதிகாரங்களும் வழங்கப்படவில்லை.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கடந்த கூட்டத்தொடரில் முன் வைக்கப் பட்ட ஆதாரங்களைத் திரட்டுவதற்கான வெளியகப்பொறிமுறை குறித்து நாம் ஏற்கனவே எமது எதிர்ப்பை வெளிப் படுத்தியிருந்ததுடன் எமது அந்த நிலைப்பாடு இப்போதும் தொடர்கின்றது. அந்தவகையில் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள கூட்டத் தொட ரின் போது இலங்கை தொடர்பில் இணையனுசரணை நாடுகளால் புதிய தீர்மானமொன்று சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் அதில் எமது அரசியலமைப்பிற்குப் புறம்பான விடயங்கள் காணப் படுமாயின் அதனை நாம் முழுமையாக எதிர்ப்பதுடன் அதற்கு ஏனைய சர்வதேச நாடுகளின் ஆதரவை நாடுவோம்.

கடந்த காலத்தில் நல்லிணக்கத்தை நிலை நாட்டுவதை முன்னிறுத்தி காணாமல் போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் ஆகியன ஸ்தாபிக்கப்பட்டிருப்பதுடன் அவற்றின் செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்களவிலான முன்னேற்றம் அடையப்பட்டிருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் நீண்ட காலமாகத் தொடரும் இப்பிரச்சினைக்கு உரியவாறு தீர்வு காணும் நோக்கில் உண்மையைக் கண்டறிவதற்கான பொறி முறையொன்றை உருவாக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆலோசனை வழங்கியிருக்கின்றார். போரின் விளைவாக தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவரும் பாதிக்கப் பட்டிருக்கின்றார்கள். எனவே இந்த உண்மையைக் கண்டறிவதற்கான பொறிமுறை என்பது அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதும் உரியவாறான தீர்வைப் பெற்றுத் தரக் கூடியதுமான பொறிமுறையாக அமைய வேண்டும். அதே போன்று இது ஒரு முடிவைக் கண்டடைவதை நோக்காகக்கொண்டதே தவிர, யார்மீதும் பழிசுமத்துவதை நோக்காகக் கொண்டதல்ல.

ஆகவே சுமார் 13 வருடகாலமாகத் தீர்வின்றித் தொடரும் பிரச்சினைக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனைக்கு அமைவாக அனைத்துத்தரப்பினரும் ஏற்கக்கூடிய உண்மையைக் கண்டறிவதற்கான பொறி முறையை உருவாக்கி அதனைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவித்தார்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தலைமையில் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் அடங்கிய அரசமட்ட பிரதிநிதிகள் குழு 06 ஆம் திகதி செவ்வாய்கிழமை ஜெனீவா பயணமாகியது. பேரவையின் 51ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் நிலையில் அன்றையதினம் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்லெட்டினால் இலங்கை தொடர்பான எழுத்து மூல அறிக்கை வெளியிடப்படவிருக்கும் அதேவேளை இலங்கை குறித்த விவாதமும் இடம்பெறவுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# இலங்கையில் மனிதஉரிமை மீறல்கள் இடம் பெற்ற இடங்கள் வரைபடத்தை வெளியிட்ட கனடா பொதுநல பரப்புரை நிலையம்

Public Interest Advocacy Centre

உள்நாட்டு மோதலின் போது ( 1983–2009) இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்ற பகுதிகளை சுட்டிக்காட்டும் வரைபடமொன்றை கனடாவை சேர்ந்த பொதுநல பரப்புரை நிலையம் **The Public Interest Advocacy Centre** என்ற அமைப்பொன்று வெளியிட்டுள்ளது.

இலங்கையில் இடம் பெற்ற ஆயிரக் கணக்கான மனித உரிமை மீறல்களை திகதிகள் பாதிக்கப்பட்ட நபர்கள் அவர்களின் பெயர்கள் இடம் பெற்ற இடம் போன்ற விபரங்களுடன் தெரிவிக்கும் வகையில் இந்த வரைபடம் காணப்படுகின்றது

இந்த வரைபடம் மனித உரிமை மீறல்கள் மற்றும் அது தொடர்பான குற்றங்கள் குறித்த ஐநாவின் பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளிற்கு அவசியமான அடிப்படை ஆதரவை வழங்குகின்றது. இது தொடர்பில் மேலும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளதாவது

இலங்கையின் சமீபத்தைய அரசியல் பொருளாதார நெருக்கடிகள் அரசாங்கத்தின் உயர்மட்டத்தில் பொறுப்புக்கூறல்கள் இல்லாததை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படுதலை வெளிப்படையாக அவதானிக்கலாம். பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தவர்களிற்கும் உண்மை நீதி மற்றும் இழப்பீட்டிற்கான உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 51வது அமர்விற்கு முன்னதாக – இலங்கையின் மனித உரிமை நிலவரம் குறித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை வெளியாகியுள்ள இந்த தருணத்தில் மோதல்கள் குறித்த இந்த வரைபடம் மனித உரிமை மீறல்களின் அளவு பரவலான தன்மை பொறுப்புக்கூறலின் அவசியம் போன்றவற்றை உரிய நேரத்தில் நினைவுட்டும் வகையில் அமைந்துள்ளது.

வரவேற்கத்தக்க விதத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் கடந்த வருட தீர்மானம் பொறுப்புக்கூறலை முன்னகர்த்துவதற்காக இலங்கையில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் குற்றங்கள் குறித்த ஆதாரங்களை ஆராய்ந்து சேகரித்து வைப்பதன் அவசியத்தை அங்கீகரித்திருந்தது.

இலங்கையில் பொறுப்புக் கூறலிற்கான சாத்தியக் கூறுகள் இல்லாததால் இந்த் ஆணையை தொடர்வதும் மேலும் விஸ்தரிப்பதும் அவசியமானது. தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுவதை முடிவிற்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் இடம் பெறும் அதேவேளை இன்னமும் பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது என்பதை மனித உரிமை ஆணையாளரின் சமீபத்தைய அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

இந்த மோதல் வரை படம் சர்வதேச மட்டத்தில் பொறுப்புக்கூறலை முன்னெடுத்துச் செல்வதற்கும் மற்றும் தங்கள் சொந்த உத்திகளை பின்பற்றுவதற்கும் ஐநா மற்றும் உறுப்புநாடுகளிற்கு துணை புரியும்.

இலங்கையின் கடந்த கால மற்றும் தொடரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச சட்ட மீறல்கள் குறித்து சர்வதேச சமூகம் தொடர்ந்தும் கரிசனையையும் அக்கறையையும் வெளிப்படுத்தி வருகின்றது என தெரிவித்துள்ள பிஏஐசி அமைப்பின் உண்மை மற்றும் பொறுப்புக் கூறலிற்கான இயக்குநர் டானியலா கவ்சன் இன்னமும் எவ்வளவு குறிப்பிடத்தக்க பணிகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது என்பதை இந்த வரைபடம் வெளிப்படுத்தியுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மோதல் வரைபடம் ஒரு சிறந்த ஆராய்ச்சி கருவி பிராந்தியம் காலம் மற்றும் வன்முறைகளின் வகைகள் அடிப்படையில் இலங்கை சமுகத்தில் மோதலின் அளவு தாக்கத்தை பயனாளிகள் அறிந்து கொள்ளக்கூடிய விதத்தில் இது காணப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு உதவுவதற்கு அமெரிக்கா தயாரென அமெரிக்க திறைசேரி செயலாளர் அறிவிப்பு!



இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளிற்கு உதவுவதற்கு தயார் என அமெரிக்க திறைசேரி செயலாளர் ஜனெட் யெலென் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளிற்கு அமெரிக்கா உதவும் பாரிஸ் கிளப் கொள்கைகளின் அடிப்படையில் நிதி உத்தரவாதங்களை வழங்கும் என தெரிவித்துள்ள அவர் இலங்கை தொடர்பில் உலகவங்கி உட்பட சர்வதேச நாணயநிதியம் உட்பட சர்வதேச நிதியமைப்புகள் மற்றும் அமெரிக்க அமைப்புகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் எனவும் தெரிவித்துள்ளார்.

கடிதமொன்றில் அவர் இதனை தெரிவித்துள்ளார் என ரொய்ட்டர் தெரிவித்துள்ளது. மிகமோசமான நிதிப்பேரழிவிலிருந்து விடுபடுவதற்கான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இலங்கை கடந்த மாதத்தின் இறுதிவாரம் 2.9 பில்லியன் டொலர் கடனுதவி தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாட்டை எட்டியிருந்தது.

கடன் வழங்கிய நாடு என்ற அடிப்படையில் அமெரிக்கா இலங்கையின் கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் பங்கேற்க முடியும் என செவ்வாய் கிழமை எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ள யெலென் இலங்கைக்கு கடன் வழங்கிய அனைவரும் பேச்சுவார்த்தைகள் மற்றும் மறுசீரமைப்பில் முழுமையாக ஒத்துழைக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்துடன் இலங்கையின் பேச்சுவார்த்தைகளிற்கு உதவுவதற்காக அமெரிக்க திறைசேரி பல்வேறு அமெரிக்க நிறுவனங்கள் ஸ்தாபனங்கள் சர்வதேச நிதி நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் எனவும் அமெரிக்க திறைசேரி செயலாளர் தெரிவித்துள்ளார்

## பிரிட்டன் அமைச்சரவையில் இடம் பிடித்த ரணில்



இலங்கை வம்சாவளியை சேர்ந்தவர் பிரிட்டனில் அமைச்சர் பிரித்தானிய அரசாங்கத்தில் கபினட் அமைச்சராக நியமிக்கப்பட்ட முதல் இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த நபர் என்ற வரலாற்றை ரணில் ஜெயவர்தன படைத்துள்ளார்.

புதிய பிரித்தானிய பிரதமர் லிஸ் ட்ரஸ்ஸின் முதலாவது அமைச்சரவையில் சுற்றாடல், உணவு மற்றும் கிராமிய விவகாரங்களுக்கான இராஜாங்கச் செயலாளராக ரணில் ஜயவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜோர்ஜ் யூஸ்டிஸுக்குப் பதிலாக ஜெயவர்தன நியமிக்கப்பட்டுள்ளார். இவர் 2015இல் வடகிழக்கு ஹாம்ப்ஷயர் நாடாளுமன்ற உறுப்பினராக நாடாளுமன்றத்தில் நுழைந்தார். மே 2020 முதல் செப்டம்பர் 2022 வரை முன்னர் சர்வதேச வர்த்தக அமைச்சராக பணியாற்றினார்.

ரணில் ஜயவர்தன பொது சபையில் நுழைவதற்கு முன்னர், லொயிட்ஸ் வங்கியில் பணி புரிந்தார். மேலும் ஹாம்ப்ஷயரில் கவுன்சிலராகவும் இருந்தார். ரணிலின் தந்தையாகிய நளின் ஜயவர்தன இலங்கை வம்சாவளியினர் ஆவார். ரணிலின் தாயாகிய இந்திரா ஜயவர்தனவோ இந்திய வம்சாவளியினர் ஆவார். நளின் ஜயவர்தன, 1978ஆம் ஆண்டு பிரித்தானியாவுக்கு புலம் பெயர்ந்துள்ளார். ரணிலின் மனைவியின் பெயர் **Alison**. தம்பதியருக்கு இரண்டு மகள்களும், ஒரு மகனும் உள்ளனர்.

இதேவேளை பிரித்தானிய பிரதமராக பதவியேற்றுள்ள லிஸ் ட்ரஸ்ஸுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாழ்த்து தெரிவித்துள்ளார்.

நாங்கள் **DCTS** மூலம் எங்கள் கூட்டாண்மையை வலுப்படுத்துவதால், இலங்கை மற்றும் இங்கிலாந்து இடையே இருதரப்பு மற்றும் கலாசார உறவுகள் தொடர்ந்து வளரும் என நான் நம்புகிறேன் என பதிவிட்டுள்ளார்.

# பாலியல் லஞ்சம் கோரிய அரசியல் கட்சி யாழ். அமைப்பாளர்கள் இருவர் கைது






அரச வேலை பெற்றுத் தருவதாக கூறி பெண்ணொருவரிடம் பாலியல் இலஞ்சம் மற்றும் 50 ஆயிரம் ரூபாய் பணம் கோரிய இருவரை எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, கொழும்பு பிரதான நீதவான் ஹர்ஷண கெகுணவெல உத்தரவிட்டார்.

அரசியற் கட்சியொன்றின் யாழ். மாவட்ட அமைப்பாளர் உள்ளிட்ட இருவர், இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக் குழுவால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

குறித்த பெண்ணை 50 ஆயிரம் ரூபாய் பணத்துடன் வருமாறு அறிவிக்கப்பட்டதாக ஆணைக்குழுவில் அந்தப் பெண் முறைப்பாடு அளித்துள்ளார். புறக் கோட்டையிலுள்ள உணவகம் ஒன்றில் வைத்து பணத்தைப் பெற முயன்ற போது, குறித் இருவரும் கைது செய்யப்பட்டதாக ஆணைக்குழு மன்றுக்கு அறிவித்தது.

# ஜனாதிபதி ரணிலின் புன்னகையும் ரவூப் ஹக்கீமின் விமர்சனமும்

கட்சி அரசியலில் விமர்சனங்கள் என்பது பொதுவானதொரு விடயம். ஆளும் கட்சியை எதிர்க்கட்சிகள் விமர்சிப்பதும் எதிர்க்கட்சிகளை ஆளும் கட்சி விமர்சிப்பதும் பொதுவானதே.ஆனால் அதற்கு அப்பால் உள்ள அரசியலை புரிந்துக் கொண்டால் மக்கள் ஒருபோதும் அரசியலுக்காக பிளவுப்பட மாட்டார்கள்.

இலங்கையின் தேசிய அரசியலில் தற்போது திரைக்கு பின்னால் நடக்கும் அரசியல் சம்பவங்களை பார்க்கும் போது அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை நிரந்தர எதிரியும் இல்லை என்பது உண்மையாகின்றது.

காலி முகத்திடம் போராட்டம், கோட்டாபய ராஜபக்ஷ தப்பியோட்டம் மற்றும் ரணில் விக்கிரமசிங்கவின் பதவியேற்பு என வரிசையாக நடந்தேறிய அரசியல் சம்பவங்களின் தொடர்ச்சி இன்றும் முடிவடைந்ததாக இல்லை என்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் காய் நகர்த்தல்கள் சாட்சி பகிர்கின்றன.

இடைக்கால வரவு செலவு திட்டத்தை சமர்பித்ததன் பின்னர் இடம் பெற்ற விவாதங்களின் போது ஜனாதிபதி பாராளுமன்றத்திலேயே இருந்து அவற்றை அவதானித்து வந்தார்.

குறிப்பாக கடந்த புதன் மற்றும் வியாழக்கிழமை ஆகிய இரு தினங்களிலுமே எதிர் தரப்பினர் முன் வைத்த விடயங்களை அவதானித்தார். பாராளுமன்றத்திலுள்ள ஜனாதிபதியின் உத்தியோகப்பூர்வ அலுவலகத்திற்குள் ஆளும் கட்சி உறுப்பினர்களை விட எதிர்க்கட்சி உறுப்பினர்களே அதிகமாக காணப்பட்டனர்.

அவர்களுடன் எப்போதுமே ஆர்வத்துடன் உரையாடும் ஜனாதிபதியிடம் அடுக்கடி பாராளுமன்றத்தில் பிரசன்னமாவதற்கான காரணத்தை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வினாவினர். பாராளுமன்றத்திற்கும் நிறைவேற்று அதிகாரத்திற்குமான உறவு வலுவாக காணப்பட வேண்டுமாயின் ஜனாதிபதி அடுக்கடி பாராளுமன்றத்திற்கு விஜயம் செய்ய வேண்டும்.

ஆளும் கட்சி உறுப்பினர்களை மாத்திரமல்ல எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் சந்தித்து கலந்துரையாட வேண்டும் என தன்னை சந்திக்க வந்த எதிர்க்கட்சி உறுப்பினர்களிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

ஜே.ஆர் ஜயவர்தன தனது ஆட்சி காலத்தில் அதிக தடவைகள் பாராளுமன்றத்திற்கு வருவதும் அனைத்து உறுப்பினர்களையும் சந்தித்து கலந்துரையாடினார். நிறைவேற்று அதிகாரம் மற்றும் பாராளுமன்றத்திற்குமான உறவை அவர் வலுப்படுத்தினார்.

அதுவொரு சிறந்த முன்னுதாரணம் என குறிப்பிட்ட ஜனாதிபதி, தன்னை சந்திக்க வந்த எதிர்க்கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பை நிறை செய்து கொண்டு, இடைக்கால வரவு — செலவு திட்ட விவாதத்தில் தனது அலுவலக அறையிலுள்ள தொலைக்காட்சியில் ஊடாக அவதானம் செலுத்தினார்.

இதன் போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காரங்கிரசின் தலைவர் ரவுப் ஹக்கிம் கடுமையாக அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் விமர்சித்து உரையாற்றினார். பயங்கரவாத தடைச் சட்டத்தை முறையற்ற வகையில் பயன்படுத்தி தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இது ஜனாதிபதி எதிர்பார்க்கும் நாட்டின் சட்டம் ஒழுங்கை பாதுகாக்கும் கொள்கைக்கு முரணானது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோர் மீது பின்தொடர்ந்து தாக்குதல் நடத்தப்படுகின்றது. இவ்வாறான செயற்பாடுகள் ஊடாக சர்வதேசத்திற்கு வழங்கும் செய்தி என்ன? எனவே ஜனாதிபதி இந்தப் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும் என விரமர்சித்து இதன் போது ரவூ ப் ஹக்கிம் உரையாற்றினார்.

ஹக்கின் உரையை புன்னகையுடன் செவிமடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அறைக்குள் வந்த இணைப்பு அதிகாரியொருவர் தகவல் ஒன்றை வழங்குவதற்காக காத்திருந்தார். அதாவது முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம் தங்களை சந்திக்க வந்திருப்பதாக இணைப்பு அதிகாரி கூறினார். புன்னகையுடனனேயே அனுமதி வழங்கினார் ஜனாதிபதி.

இதன் பின்னர் ஜனாதிபதியை சந்திக்க மேலும் சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வந்தனர். சர்வக்கட்சி அரசாங்கம் குறித்து வினாவினர். பிரதான எதிர்க் கட்சி உட்பட பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்து அரசியல் கட்சிகளும் சர்வக்கட்சி அரசாங்கத்தில் இணையும் என்ற நம்பிக்கை உள்ளது. எவ்வாறாயினும் அடுத்த வாரத்தில் இராஜாங்க அமைச்சுக்களை வழங்க தீர்மானித்து உள்ளதாக ஜனாதிபதி பதிலளித்தார்.


அன்பு இல்லக் குழந்தைகளின்
வாழ்வுக்காகவும் வாழ்வாதாரத்திற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை
நடாத்தும் 10வது ஆண்டு விழா
தமிழக - ஈழத்தமிழக பாடகர்களுடன்
இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்
23 ஒக்டோபர் 2022 ஞாயிறுக்கிழமை
தொடர்புகளுக்கு:- 416 841 9600

கடன் தொல்லையா?
பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்
கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224, Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# வடக்கு கிழக்கில் இராணுவ பிரசன்னத்தைக் குறைத்து

## காணிப் பிரச்சனையைத் தீருங்கள் ஐ.நா.மனிதஉரிமைகள் ஆணையர் வலியுறுத்து

இலங்கை தொடர்பிலான ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பெச்சலட்டின் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மீண்டும் இடம் பெறாத வகையில், பொறுப்புக்கூறல் மற்றும் ஆழமான மறுசீரமைப்புகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனித உரிமைகளை பாதுகாக்கவும் மறுசீரமைப்புகளை மேற்கொள்ளவும் புதிய அரசாங்கம் தேசிய கருத்தாடலுக்கு செல்ல வேண்டும் என ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் வலியுறுத்தியுள்ளார். அரசியல் ரீதியாக மிகவும் நெருக்கடியை இலங்கை சந்தித்துள்ள நிலையில், புதிய பிரவேசத்திற்கு இதனை சந்தர்ப்பமாக பயன்படுத்த வேண்டும் என ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தராதரம் இன்றி நாட்டின் அனைவரையும் பொருளாதார நெருக்கடி பாதித்துள்ளதாகவும் அதில் இருந்து மீள்வதற்கு ஊழலை ஒழிப்பது தொடர்பில் கவனம்



செலுத்த வேண்டும் எனவும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், கடுமையான பாதுகாப்பு சட்டங்களில் தங்கியுள்ளமை மற்றும் அறவழி போராட்டக்காரர்களை அடக்கும் செயற்பாடுகளை முடிவிற்கு கொண்டு வர வேண்டும் எனவும் அவரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் பல்கலைக்கழக மாணவர் செயற்பாட்டாளர்களை கைது செய்யவும் பொது மக்களின் போராட்டங்களை அடக்கவும் அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கி, பொறுப்புக்கூறலை நிறைவேற்றும் வகையில் சட்டங்களை வகுக்குமாறும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் ஆராயும் அலுவலகம் பலப்படுத்தப்பட வேண்டுமெனவும் சுயாதீனமாகவும் செயற்றிறனாகவும் செயற்பட அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமெனவும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கில் அதிகளவில் காணப்படும் இராணுவ பிரசன்னம் குறைக்கப்பட வேண்டுமெனவும் இராணுவம் கைப்பற்றியுள்ள தனியார் காணிகளை விரைவில் விடுவிக்க வேண்டுமெனவும் அங்கு நிலவும் காணி பிணக்குகளுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டுமெனவும் அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பிலான விசாரணைகளை சர்வதேசத்தின் ஒத்துழைப்புடன், வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளுமாறு ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இது சிங்கள பௌத்த நாடு என்பதை மறந்து விடாதீர்கள்!

# முல்லைத்தீவில் தூபிகளை பராமரிக்க யாருடைய அனுமதியும்

## தேவையில்லையென பாராளுமன்றத்தில் இனவெறியைக் கக்கிய சரத் வீரசேகர



இது சிங்கள பௌத்த நாடு என்பதனை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், இதன்படி இங்கு பழைய தூபிகளை பராமரிக்க எவருடைய அனுமதியையும் பெற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் கிடையாது என்றும் முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

வேறு நாட்டில் என்றால் பெரும்பான்மையான மதமொன்றுக்கு வேறு மதத்தை சேர்ந்த ஒருவர் இடையூறு ஏற்படுத்தினால் அதற்கு மறுநாள் அவர் காணாமல் போயிருப்பார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் கடந்த புதன் கிழமை நடைபெற்ற சிறுவர் மற்றும் தாய்மார்களின் மந்த போசனை தொடர்பில் யுனிசெப் வெளியிட்டுள்ள அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே சரத் வீரசேகர இவ்வாறு தெரிவித்துள்ளார். அதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில் தெரிவித்தவை வருமாறு –

ஆகஸ்ட் 31 ஆம் திகதியன்று தமிழ்க் கூட்டமைப்பு எம்.பியொருவர் முல்லைத்தீவு குறுந்து விகாரையின் விகாராதிபதி சட்டவிரோத நிர்மாணத்தை மேற்கொள்வதாக தெரிவித்து பொய்யான தகவலை பாராளுமன்றத்திற்கு அறிவித்து, பாராளுமன்றத்தையும் மக்களையும் தவறாக வழிநடத்த முயற்சித்துள்ளார். தொல்பொருள் அகழ்வு பணிகளை நிறுத்துவதற்கான தீய எண்ணத்துடனேயே அவர் அவ்வாறு கூறியுள்ளார். முல்லைத்தீவு நீதவான் அந்த நிர்மாணத்தை நிறுத்துவதற்கு உத்தரவு வழங்கியிருந்தார்.

அதன் பின்னர் பொலிஸார் நகர்த்தல் பத்திரமொன்று மூலம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்டத்தரணிகளுடன் அந்த இடத்திற்கு சென்று அவதானித்து அந்த வழக்கை நீக்கிக் கொண்டுள்ளனர். இதன்படி தொல்பொருள் அகழ்வாராட்சி திணைக்களத்திற்கு அதனை பராமரிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படியே நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன.

குறுந்து அசோக்க விகாரை என்பது 2000 வருடங்கள் வரையில் பழமையான பௌத்த விகாரை தொகுதியாகும். தீபவம்சம் மற்றும் மகாவம்சத்திற்கு அமைய குறுந்து உண்மைக் கதையை எழுதிய வரலாற்று இடமாகும். அங்கு அகழ்வுகளின் போது புத்தர் சிலைகள் உள்ளிட்டவை மீட்கப்பட்டுள்ளன. ஆனால் அங்கு எந்த இடத்திலும் இந்து ஆலயம் இருந்தமைக்கான சாட்சியம் இல்லை. இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் அன்று நடந்த சம்பவத்திற்கு வெட்கப்பட வேண்டும்.

இங்கு புனித சின்னங்களை பிரதிஸ்டை செய்யும் நிகழ்வு ஜூன் 12 ஆம் திகதி நடைபெற்றது. இதற்கு பௌத்த பீடங்களின் நாயக்க தேரர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர். இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சேர்ந்த சிலர் குண்டர் குழுக்களுடன் சென்று அதனை குழப்பினர். மலர் ஒன்றை வைத்துக்கூட பூஜை செய்ய முடியாத வகையில் பிக்குகள் திரும்பியிருந்தனர்.

இந்த பௌத்த நாட்டில் பௌத்த சாசனத்தை அவமதிக்கும் வேலையை செய்யும், பௌத்தர்கள் அமைதியாக பார்த்துக் கொண்டிருப்பதை மௌனித்திருப்பதாக கருத வேண்டாம் என்று அன்று நான் பாராளுமன்றத்தில் கூறினேன். அன்று விடுதலைப் புலிகள் மக்களையும், அரந்தலாவ பிக்குகள் உள்ளிட்டவர்களை கொலை செய்யும் போதும், கொழும்பில் இந்து ஆலயங்களில் திருவிழாக்கள் நடந்தன. பௌத்தர்கள் எந்தத் தடைகளையும் ஏற்படுத்தவில்லை. அதனால் நீங்கள் செய்யும் வேலையால் அனைத்து தமிழ் மக்களுக்கும் அவமானத்தையே கொண்டு வந்துள்ளது.

இது பௌத்த நாடாகும். சிங்கள பௌத்த நாடு என்பதனை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். மேற்குலக நாடொன்றின் தூதுவர் ஒருவர், ஏன் இதனை சிங்கள பௌத்த நாடு என்று கூறுகின்றீர்கள் என்று ஒருவரிடம் கேட்டுள்ளார். நீங்கள் தேவேந்திர முனையில் இருந்து காங்கேசன்துறைக்கு ஹெலிகப்டரில் போகும் போது தெரியும் விகாரைகள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்டுள்ளமையினாலேயே அவ்வாறு கூறுவதாக தூதுவருக்கு அவர் விளக்கமளித்துள்ளார்.

இங்கு பழைய தூபிகளை பராமரிக்க எவருடைய அனுமதியை பெற்றுக் கொள்ளவும் அவசியமில்லை. அது தொல்பொருள் திணைக்களத்தின் பணியாகும். எந்தளவுகளுக்கு இந்து ஆலயங்கள், முஸ்லிம் பள்ளிகள் இந்த நாட்டில் அமைக்கப்படுகின்றன. அதற்கு பௌத்தர்கள் ஒருபோதும் எதிர்ப்பு வெளியிடுவதில்லை.

இதேவேளை அவர் வடக்கில் பௌத்த விகாரைகளை அமைக்க வேண்டாம் என்று கோசங்களை எழுப்பி விட்டு கொழும்புக்கு வந்து மீண்டும் வடக்கிற்கு போவதானது இது பௌத்த நாடு என்பதனாலேயே ஆகும் என்பதனை குறித்த எம்.பி நினைவில் கொள்ள வேண்டும். வேறு நாட்டில் பெரும்பான்மையான மதமொன்றுக்கு வேறு மதத்தை சேர்ந்த ஒருவர் இடையூறு ஏற்படுத்தினால் அதற்கு மறுநாள் அவர் காணாமல் போயிருப்பார். ஆனால் குறுந்து விகாரை பராமறிப்புக்காக இடைவிடாது செய்யும் இடையூறுகளை நிறுத்துமாறு நாங்கள் மிகவும் வினயமாக அவர்களிடம் கேட்கின்றோம். இந்த பராமறிப்பு பணிகளை தொல்பொருள் திணைக்களம் நிறுத்தாது முன்னெடுத்துச் செல்லும். அது நிறுத்தப்படாது.

இதேவேளை இந்த நடவடிக்கைகளால் இனச் சுத்திகரிப்பு செயற்பாடு நடக்கும் என்று குறித்த எம்.பி கூறியுள்ளார். ஆனால் யாழ்ப்பாணத்தில் 25.000 யிலான சிங்கள குடும்பங்கள் இருந்தன. இப்போது எத்தனை பேர் இருக்கின்றனர். அங்கு இப்போது எவ்வளவு முஸ்லிம் குடும்பங்கள் இருக்கின்றன. உண்மையில் இனச் சுத்திகரிப்பு நடந்திருந்தால் சிங்களம் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிராகவே நடந்திருக்கும். இதனால் இந்த எம்.பிக்களுக்கு சரியான பாதைகளை காட்டுங்கள். இல்லாவிட்டால் இவர்களை விரட்டியடிங்கள் என்று நான் தமிழ் முக்கியஸ்தர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன். இவ்வாறு சரத் வீரசேகரா தெரிவித்தார்.

# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

**அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.**

**தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா**

**செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)**

**பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)**

**உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)**

**உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)**

**பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்**

**இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்**

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

10 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

03 செப்டம்பர் 2022 முதல் 09 செப்டம்பர் 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த 2021 செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 20வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு முத்துத்தம்பி கோபாலபிள்ளை

சரவனை மேற்கு வேலணையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு முத்துத்தம்பி கோபாலபிள்ளை (இராஜகுரு) அவர்களது 20வது ஆண்டு நினைவு நாள் 05 செப்டம்பர் 2022 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு முத்துத்தம்பி கோபாலபிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 24வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சீவரத்தினம் சந்திரமலர்

நயினாதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சீவரத்தினம் சந்திரமலர் அவர்களது 24வது ஆண்டு நினைவு நாள் 08 செப்டம்பர் 2022 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சீவரத்தினம் சந்திரமலர் அவர்களது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 34வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சிவபாக்கியநாதன் கணபதிப்பிள்ளை

யாழ்ப்பாணம் தொல்புரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த திரு கணபதிப்பிள்ளை சிவபாக்கியநாதன் அவர்களது 34வது ஆண்டு நினைவு நாள் 30 ஆகஸ்ட் 2022 விநாயகர் சதுர்த்தி தினமான செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு கணபதிப்பிள்ளை சிவபாக்கியநாதன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 39வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சின்னத்துரை அரசரெத்தினம்

யாழ்ப்பாணம் அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த திரு சின்னத்துரை அரசரெத்தினம் அவர்களது 39வது ஆண்டு நினைவு நாள் 02 செப்டம்பர் 2022 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு சின்னத்துரை அரசரெத்தினம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்கின்றார்கள்.

## 32வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம்

யாழ்ப்பாணம் வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களது 32வது ஆண்டு நினைவு நாள் 30 ஆகஸ்ட் 2022 விநாயகர் சதுர்த்தி தினமான வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது பெற்றோர், சகோதர்கள் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

**அன்பு இல்லக் குழந்தைகளின்**

**வாழ்வாதாரத்திற்காகவும் கல்வி மேம்பாட்டிற்காகவும்**

**உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை நடாத்தும்**

**10வது ஆண்டு விழா**

**தமிழக - ஈழத்தமிழக பாடகர்களுடன்**

**இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்**


**23 ஒக்டோபர் 2022 ஞாயிறுக்கிழமை**

**தொடர்புகளுக்கு:- 416 841 9600**

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




03 செப் 2022 சனிக்கிழமை கனடாவாழ் துன்னாலை கரவை மக்கள் மன்றத்தின் ஞானதீபம் 2022 நிகழ்வின் நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவும் இனிப்புவகைகளும் வழங்கி மகிழ்ந்தார்கள்.




03 செப் 2022 சனிக்கிழமை திருச்சி இந்தியாவைச் சேர்ந்த சிவஸ்ரீ திருக்கோலக்கா ஆர். சண்முகசுந்தர சிவாச்சாரியார் ஸ்ரீவித்தியா இணையர்களது 47வது திருமண நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




04 செப் 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் கார்த்திகேயனின் 11வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் கார்த்திகேயன் தனது பெற்றோர்கள் சகோதரங்களோடு இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




05 செப் 2022 திங்கட்கிழமை சரவனை மேற்கு வேலணையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு முத்துத்தம்பி கோபாலபிள்ளை (இராஜகுரு) அவர்களது 20வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




08 செப் 2022 வியாழக்கிழமை நயினாதீவு 7ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி சீவரெத்தினம் சந்திரமலர் அவர்களது 24வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




09 செப் 2022 வெள்ளிக்கிழமை செல்லச்சந்நிதி முருகன் ஆலயத் தேர்த்திருவிழாவை முன்னிட்டு அன்றையதினம் மிஸிசாகா கனடாவில் வசிக்கும் திரு திருமதி சிதம்பர நாதன் குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




09 செப் 2022 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ரஞ்சன் சந்திரிகா தம்பதிகளின் செல்வப்புதல்வி ஸ்ரீவர்சா ரஞ்சனின் பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வி ஸ்ரீவர்சா தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்

## 11வது பிறந்த நன்நாள் வாழ்த்து






## செல்வன் அரண் லோகன்

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருக்கும் சமூக சேவையாளரும் வர்த்தகம் மற்றும் அரசியல் பிரமுகருமான திரு திருமதி லோகன் இராசையா மாலதி தம்பதிகளின் செல்வப்புதல்வன் அரண் லோகனின் 10வது பிறந்த நன்நாள் 10 செப்டம்பர் 2022 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகப் பிறந்த நன்நாளைக் கொண்டாடும் செல்வன் அரண் லோகன் அவர்கள் தனது பெற்றோர்கள் சகோதரங்களுடன் இணைந்து அன்றைய தினம் அன்பு இல்லக் குழந்தைகளுக்கும் சிறப்பு உணவு வழங்கி மகிழ்வுள்ளார். அகவை பத்து காணும் செல்வன் அரண் பல்கலையும் கற்றுப் பார்போற்றும் பைந்தமிழ் மகனாக வாழ வேண்டுமென வாழ்த்தும் பெற்றோர்கள், சகோதரங்கள், உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். அரண் வாழ்க வளமுடன்! வாழ்த்துக்கள்.

### அன்பு இல்லக் குழந்தைகளின் வாழ்வாதாரத்திற்காகவும் கல்வி மேம்பாட்டிற்காகவும்

23 ஒக்டோபர் 2022
ஞாயிறுக்கிழமை
ஈழநாடு நடாத்தும்
10வது ஆண்டு விழா
இன்னிசை மாலையும்
இராப்போசன விருந்தும்
சுப்பர் சிங்கர் புகழ் புண்ணியா
பின்னணிப் பாடகர் ஹரிஹரசுதன்







வட்டி வீதம் மேலும் அதிகரிக்கலாம்
வீடு-விலை மேலும் குறைவடையலாம்
உங்கள் வீட்டினை
நியாயமான விலைக்கு விற்க விரும்பினால் !
Please Call: 416-450-2424
RE/MAX
#1
Buying / Selling / Leasing
வீடு, வியாபார நிலையங்கள் வாங்க, விற்க..
கனடியத் தமிழர் சமூகத்தில் நம்பிக்கையான ஒரு முகவர்
CONSUMER CHOICE AWARD 2019 GTA EAST
$ 849,000
Scarborough
Meadowvale & Sheppard
Att/Row/Twnhouse
2-Storey
Bedrooms: 3
Washrooms: 3
Freehold Townhouse
$ 898,888
Scarborough
Mccowan / Lawrence
Detached Bungalow
Bedrooms: 3 + 2
Washrooms: 2
Sep Entrance/50 Foot Lot.
$ 870,000
Scarborough
Morningside/Sewells
Detached 2-Storey
Bedrooms: 3
Washrooms: 3
Corner Lot
$ 999,900
Markham
14th Ave And Box Grove
Detached 2-Storey
Bedrooms:4 + 1 Wrms:4
A Beautiful
Immaculate Home
$ 1,299,000
Markham
16th Ave & Kennedy Rd.
Detached 2-Storey
Bedrooms: 3+1 Wrooms: 3
Meticulously Maintained
Corner Home
$ 999,999
Vaughan
Jane & Major Mackenzie.
Detached 2-Storey
Bedrooms: 3+1 Wrms: 4
Sep Entrance/
Well maintained
$ 1,199,000
Pickering
Foxwood Trail/Gardenview Sq.
Detached 2-Storey
Bedrooms: 4
Washrooms: 3
Upgraded
$ 979,900
Pickering
Whites Rd N & Strouds Ln.
Semi-Detached 2-Storey
Bedrooms: 4
Washrooms: 4
Modernly Renovated
$ 1,260,000
Ajax
Salem And Williamson
Detached 2-Storey
Bedrooms: 4
Washrooms: 3
9" Ceiling,
$ 888,000
Ajax
Salem & Highway 2.
Detached 2-Storey
Bedrooms: 3
Washrooms: 4
Newly Renovated
$ 899,000
Whitby
Brock St N/ Dryden Blvd.
Detached 2-Storey
Bedrooms: 3 + 2
Washrooms: 4
Newly Renovated
$ 635,000
Oshawa
Grandview/Bloor St.
Detached Bungalow
Bedrooms: 3 + 1
Washrooms: 2
Updated
$ 625,000
Bowmanville
Third St & Liberty St N.
Detached Bungalow
Bedrooms: 3
Washrooms: 2
Sep Entrance/ 70 Foot lot
$ 489,999
Scarborough
Neilson & Finch.
Condo Apartment
Bedrooms: 2
Washrooms: 2
Upgraded
$ 572,000
Scarborough
Finch Ave E & Middlefield Rd.
Condo Apartment
Bedrooms: 2 + 1
Washrooms: 2
Open Concept Condo
(Mortgage) அடமான ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்
2017 Diamond Club Award
2016 Diamond Club Award
2015 Platinum Club Award
கமல் நவரட்ணம்
KAMAL
NAVARATNAM
Sales Representative
Direct:
416-450-2424
E mail:kamal@kamalrealtor.ca
www.kamalrealtor.ca
RE/MAX
COMMUNITY
Realty Inc., Brokerage
Office:
416-287-2222
Fax:
416-282-4488
1265 Morningside Ave.,
Suite 203, Toronto,
ON M1B 3V9
KAMAL NAVARATNAM REAL ESTATE
Trusted and reliable services

# மகாராணி எலிசபெத் 96வது வயதில் காலமானார்!

பிரிட்டனின் நீண்டகால முடியாட்சியை நடத்தி வந்த மகாராணி இரண்டாம் எலிசபெத், 70 ஆண்டுகள் ஆளுகைக்குப் பிறகு, 96 வயதில் பால்மோரலில் காலமானார். 08 செப் 2002 வியாழக்கிழமை ராணியின் உடல்நிலை கவலைக்கிடமானதை அடுத்து அவரது குடும்பத்தினர் ஸ்காட்லாந்தில் உள்ள பால்மோரல் எஸ்டேட்டில் கூடினர்.

1952இல் அரியணைக்கு வந்த ராணி, மிகப் பெரிய சமூக மாற்றத்தை தன் வாழ்நாளில் கண்டார். அவரது மரணத்துடன், முன்னாள் வேல்ஸ் இளவரசரான அவரது மூத்த மகன் சார்ல்ஸ், புதிய அரசராக இருந்து 14 காமன்வெல்த் நாடுகளுக்குத் தலைவராகவும் விளங்கி நாட்டை துக்க காலத்தில் வழி நடத்துவார்.

பக்கிங்ஹாம் அரண்மனை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், '08 செப் 2022 இன்று பிற்பகல் பால்மோரலில் ராணி அமைதியாக மறைந்தார். அரசர் மற்றும் அவரது துணைவியான அரசி இன்று மாலை பால்மோரலில் தங்குவார்கள். நாளை அவர்கள் லண்டனுக்குத் திரும்புவார்கள்,' என்று கூறப்பட்டுள்ளது.

ராணியை மருத்துவ கண்காணிப்பில் மருத்துவர்கள் வைத்த நிலையில், அவரது பிள்ளைகள் அனைவரும் அபெர்தீனுக்கு அருகே உள்ள பால்மரோலுக்கு பயணம் மேற்கொண்டனர். ராணியின் பேரனான இளவரசர் வில்லியமும் அங்கு இருக்கிறார். அவரது சகோதரர் இளவரசர் ஹாரி அங்கு சென்று கொண்டிருக்கிறார்.

ராணி எலிசபெத் II அரச தலைவராக இருந்த காலம் போருக்குப் பிந்தைய சிக்கன நடவடிக்கையின்போது நடந்தது. பேரரசில் இருந்து காமன்வெல்த் ஆக நாடு மாற்றம் அடைந்தது, பனிப்போரின் நிறைவுக்காலம், ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டன் இணைந்தது மற்றும் வெளியேறிய காலம் அதில் அடங்கியது.

ராணியின் ஆளுகை, 1874இல் பிறந்த வின்ஸ்டன் சர்ச்சில் தொடங்கி 101 ஆண்டுகளுக்குப் பிறகு 1975இல் பிறந்த லிஸ் டிரஸை இந்த வாரத்தில் புதிய பிரதமராக நியமிக்கும்வரை 15 பிரதமர்களைக் கண்டது. தமது ஆட்சிக் காலம் முழுவதும் தமது பிரதமருடன் வாராந்திர சந்திப்புகளை அவர் நடத்தி வந்தார்.





லண்டனில் உள்ள பக்கிங்ஹாம் அரண்மனையில், ராணியின் உடல்நிலை குறித்த அறிவிப்புகளுக்காகக் காத்திருந்த மக்கள், அவரது மரணத்தைக் கேள்விப்பட்டதும் அழத் தொடங்கினர். அரண்மனையின் உச்சியில் இருந்த யூனியன் கொடி பிரிட்டன் உள்ளூர் நேரப்படி மாலை 6.30 மணிக்கு அரைக்கம்பத்தில் இறக்கப்பட்டது. ராணி எலிசபெத் அலெக்ஸாண்ட்ரா மேரி விண்ட்சர், லண்டனில் உள்ள மே∴பேரில் 1926ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் தேதி பிறந்தார்.

அவர் தனது வெள்ளிவிழா நிகழ்வின் போது, 30 ஆண்டுகளுக்கு முன்பு தான் தென்னாப்பிரிக்கா சென்றிருந்த போது அவர் மேற்கொண்ட உறுதிமொழியை நினைவு கூர்ந்தார்.

நான் 21 வயதாக இருந்த போது நம் மக்களுக்கு சேவை செய்ய என் வாழ்வை அர்ப்பணிப்பதாக உறுதி எடுத்துக் கொண்டேன். அந்த உறுதிமொழியை நிறைவேற்ற கடவுளின் உதவியை கேட்டேன். அந்த வாக்குறுதி என் இளம் வயதில், முடிவெடுப்பதில் அனுபவமற்றிருந்த போது எடுக்கப்பட்டது என்றாலும் அந்த உறுதிமொழியின் ஒரு சொல் குறித்தும் நான் வருத்தப்படவோ, ஒரு சொல்லில் இருந்தும் பின்வாங்கவோ இல்லை எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8 - Tel : 416-321-6104



MEMBERS ANNUAL GENERAL MEETING 2022

The 27th Annual General Meeting will be held on Saturday October 01, 2022 from 10 am to 1pm.

Time :- 10 am to 1 pm on 01/Oct/2022 Saturday

Place :- Canada Sri Ayyappa Temple

Elections for 4 New Board of Directors for 2022, will be held on Saturday Oct 29th 2022.

Time :- 10 am to 2 pm on 29/Oct/2022 Saturday

Place :- Canada Sri Ayyappan Temple Hall

முக்கிய அறிவித்தல் :- அங்கத்தவர்களுக்கான வருடாந்த பொதுக்கூட்டம் 2022

அன்புடையீர்!

ஸ்ரீ ஐயப்ப சமாஜத்தின் 27வது பொதுக்கூட்டம், ஐப்பசி 01, 2022 சனிக்கிழமை காலை 10.00 தொடக்கம் 1 மணிவரை இடம்பெறும்.

காலம் :- 01/Oct/2022, நேரம் :- காலை 10.00 தொடக்கம், பகல் 1 மணிவரை

இடம் :- கனடா ஸ்ரீ ஐயப்ப மண்டபம்

புதிய நான்கு நிர்வாகிகளுக்கான தேர்வு ஐப்பசி 29ம் திகதி சனிக்கிழமை (29/10/2022) காலை 10 மணி தொடக்கம், பகல் 2 மணிவரை இடம் பெறும்.

காலம் :- 29/Oct/2022, நேரம் :- காலை 10.00 தொடக்கம், பகல் 2 மணிவரை

இடம் :- கனடா ஸ்ரீ ஐயப்ப மண்டபம்

மேலதிக தொடர்புகளுக்கு ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்

416.321.6104, 416.321.7558

அறங்காவலர் சபையினர்

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support


## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

## Sasitharan Law Professional Corporation
**10 Milner Business Court, Suite 709, (Markham & Milner), Scarborough ON M1B 3C6**
Tel: **416.949.0404** / Fax: **416.948.0303** • **info@sasilaw.ca** • **www.sasilaw.ca**





Mahindan Mailvaganam, B.Sc., M.Sc.
Senior Insurance Specialist
Elite Field Sales Advisor
RBC Insurance
WOODSIDE SQUARE MALL (McCowan & Finch)
1571 Sandhurst Circle
Scarborough, ON M1V 1V2
mahindan.mailvaganam@rbc.com
Cell: 416-262-4973

- Universal Life Insurance
- Term (10 to 40 years) Insurance
- Term 100
- Non Medical Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Travel Insurance
- RRSP
- TFSA

உங்கள் வாகனத்தின் மாதாந்த காப்புறுதி கட்டணம் அதிகரிக்கப்பட்டிருந்தால் எமது காப்புறுதி ஆலோசகர்களால் உங்களுக்கு உதவ முடியும்!

RBC Insurance
Life | Health | Auto | Home | Travel | Wealth



Friends MATRIMONY

உங்கள் திருமணத் தேடலுக்கோர் முற்றுப்புள்ளி...

10,000க்கு மேற்பட்ட வரன்கள் கையிருப்பில்!

10,000+

இலங்கைத் தமிழர்களுக்கான உலகளாவிய திருமண இணையத்தளம்.



**மணமகள் தேவை**
கனடாவில் வசிக்கின்ற 29 வயது வேளாளர். Bachelors degree, Trading associate மணமகனுக்கு பொருத்தமான வரனை எதிர் பார்க்கின்றோம்.

**மணமகள் தேவை**
கனடாவில் வசிக்கின்ற 33 வயது வேளாளர். Diplpma, own business மணமகனுக்கு பொருத்தமான வரனை எதிர் பார்க்கின்றோம்.

**மணமகள் தேவை**
கனடாவில் வசிக்கின்ற 30 வயது வேளாளர். Bachelors degree, Medical Administration மணமகனுக்கு பொருத்தமான வரனை எதிர் பார்க்கின்றோம்.

- 416 477 6854
  416 477 2259
  647 709 1536
- GTA Square- 5215 Finch Ave. E. Unit 257
- friendsmatrimonym@gmail.com

Mon to Fri
10AM to 7PM
Sat
1PM to 7PM

www.friendsmatrimony.com

# புலம்பெயர் தமிழரை நோக்கி ரணில் வீசிய கொழுக்கி!

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



கனடாவில் உள்ள நண்பர் ஒருவர் கேட்டார். தாயகத்தில் உள்ள தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்ட மூன்று கட்சிகளையே எங்களால் ஒருங்கிணைக்க முடியவில்லை. இந்நிலையில், புலம் பெயர்ந்த தமிழர் அமைப்புகளையும் நபர்களையும் ஒன்றிணைத்து தாயகத்தில் முதலீடு செய்வது நடக்கக் கூடிய காரியமா? என்று. ரணில் விக்ரமசிங்க புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் உள்ள சில அமைப்புக்கள் மற்றும் நபர்களின் மீது தடையை நீக்கியது தொடர்பில் நான் எழுதிய ஒரு கட்டுரை தொடர்பாகவே அவர் அவ்வாறு கேட்டிருந்தார்.

நியாமான கேள்வி. தாயகத்தில் ஒரு சிறிய நிலப்பரப்புக்குள், மிகச்சிறிய சனத்தொகையின் மத்தியில் இயங்கிக் கொண்டிருக்கும் மூன்று கட்சிகளை ஒன்றாக்க முடியவில்லை. ஆனால் புலம்பெயர்ந்த தமிழ்ப் பரப்பு எனப்படுவது உலகம் முழுவதும் பரந்து விரிந்து சிதறிக் கிடக்கிறது. அது வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு மொழிகளைப் பேசுகிறது. வெவ்வேறு பண்பாடுகளில் வெவ்வேறு பொருளாதாரக் கட்டமைப்புகளில் வெவ்வேறு நிலையான பொருளாதார நலன்களோடு காணப்படுகிறது. தாயகத்தை நோக்கிய பிரிவேக்கம் என்ற ஒன்றைத்தவிர வேறு எதுவும் அந்த அமைப்புகளுக்கிடையில் இப்பொழுது பொதுவானதாக இல்லை. கடந்த 13ஆண்டுகளாக ஐக்கியப்பட முடியாத, ஐக்கியப்படுத்த யாருமில்லாத ஒரு புலம்பெயர் சமூகமாக தமிழ் சமூகம் காணப்படுகிறது.

கடந்த 13 ஆண்டுகளில் ஐநாவை நோக்கியும் உலகப்பொது மன்றங்களை நோக்கியும் நீதிக்காக அயராது உழைத்த ஒரு சமூகமாகவும், இலங்கை அரசாங்கத்துக்கு தொடர்ச்சியாக நெருக்கடியைக் கொடுத்த ஒரு சமூகமாகவும் அது காணப்படுகிறது. தாயகத்தில் இருக்கும் கட்சிகளுக்கும் செயற்பாட்டாளர்களுக்கும் தனிநபர்களுக்கும் நிதியை அள்ளி வழங்கிய காசு காய்க்கும் மரமாகவும் அது காணப்படுகிறது. உலகின் மிகவும் கவர்ச்சியான செயல் திறன்மிக்க ஒரு புலம்பெயர் சமூகமாக அது தன்னை வெளிக்காட்டியிருக்கிறது. ஆனாலும் மிகவும் சிதறிப்போன கூட்டுச் செயற்பாடு இல்லாத ஒரு புலம்பெயர் சமூகமாகவும் அது தன்னை நிரூபித்திருக்கிறது. கடந்த 13 ஆண்டுகளாக ஜெனீவாவில் பொருத்தமான வெற்றிகளைப் பெறத் தவறியதற்கு அதுவும் ஒரு காரணமா?

தாயகத்தில் இயங்கும் கட்சிகளுக்கும் செயற்பாட்டாளர்களுக்கும் நிதி உதவ புரியும் அதேநேரம் அந்த நிதி உதவி தான் கட்சிகளையும் செயற்பாட்டாளர்களையும் பிரித்து வைத்திருக்கிறது என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அந்த நிதி உதவிகளால் தாயகத்தில் ஐக்கியத்தை ஏற்படுத்த முடியவில்லை. அல்லது மறுவளமாகச் சொன்னால் புலம்பெயர்ந்த தமிழ் சமூகம் எவ்வளவு தான் காசு கொடுத்தாலும் அந்த காசினால் தாயகத்தில் கட்சிகளுக்கும் செயற்பாட்டாளர்களுக்கும் இடையே ஐக்கியத்தை ஏற்படுத்த முடியவில்லை.

இதை இன்னும் கூர்மையாகச் சொன்னால் அவ்வாறு ஐக்கியம் ஏற்படாமைக்கு மேற்படி தனித்தனியான தூர இயக்கி-ரிமோட் கண்ட்ரோல்- உதவியும் ஒரு காரணம் எனலாம். இவ்வாறான கூட்டுச் செயற்பாடற்ற ஒரு புலம் பெயர்ந்த சமூகத்தை நோக்கி இலங்கை அரசாங்கம் கொழுக்கிகளை வீசியிருக்கிறது என்பதே உண்மை. தங்களுக்கிடையே ஒற்றுமைப்படாத ஒரு சமூகம் இந்த கொழுக்கிகளில் சிக்கி உதிரிகளாகத் தன் வலையில் வந்து விழும் என்று அரசாங்கம் சிந்திக்கின்றது.

அவ்வாறு சிந்திக்கத் தேவையான கொழுத்த அனுபவம் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உண்டு.கடந்த 2015ல் ஆட்சி மாற்றத்தின் பின் அவர் அதைச் செய்தார். அப்பொழுதும் இதே அமைப்புகள் மீதும், நபர்கள் மீதும் தடைகள் நீக்கப்பட்டன. இப்பொழுது இருப்பதைப்போல பொருளாதார நெருக்கடி என்ற விவகாரம் அப்பொழுது இருக்கவில்லை. ஆனால் ஜெனிவாவை கையாள்வது, புலம்பெயர்ந்த தமிழ்ச்சமூகத்தின் பலத்தை உடைப்பது போன்ற நிகழ்ச்சி நிரல்கள் இருந்தன.அந்த நிகழ்ச்சிநிரலை முன்வைத்து குறிப்பிடத்தக்களவுக்கு ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் முன்நகரக் கூடியதாகவும் இருந்தது.



குறிப்பாக ஐநாவில் நிலைமாறு கால நீதியை நோக்கி புலம்பெயர்ந்த தமிழ் சமூகத்தின் ஒரு பகுதியை ஈர்த்து எடுப்பதில் அரசாங்கம் குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேறியிருந்தது. தாயகத்தில் கூட்டமைப்பும் அப்பொழுது அந்த நிகழ்ச்சி நிரலிற்கு உட்பட்டு நிலை மாறு கால நீதியை ஆதரித்தது. இதனால் கூட்டமைப்பு மற்றும் தடை நீக்கப்பட்ட புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் போன்றன இணைந்து நிலைமாறு காலை நீதிக்குரிய நிகழ்ச்சி நிரலை பலப்படுத்தின.

இது விடயத்தில் தடை நீக்கப்பட்ட தமிழ் புலம்பெயர் அமைப்புகள் சில பெருமளவுக்கு தாம் வாழும் நாடுகளில் உள்ள அரசாங்கங்களின் நிலைமாறு கால நீதிக்கான நிகழ்ச்சி நிரலை அதிகபட்சம் முன்னெடுத்தன. அக்காலகட்டத்தில் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் நிலைமாறு கால நீதியா? அல்லது பரிகார ரீதியா? என்று ஜெனிவாவில் தங்களுக்கிடையே பிரிந்து நிற்கும் ஒரு நிலை தோற்றுவிக்கப்பட்டது. அல்லது புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகங்கள் வாழும் நாடுகளில் உள்ள அரசாங்கங்கள் ஐநாவில் முன்னெடுத்த தமிழர் தொடர்பான நிகழ்ச்சி நிரலைப் பெருமளவுக்குப் பிரதிபலித்த தமிழ் அமைப்புகள்,அல்லது பிரதிபலிக்க மறுத்த தமிழ்அமைப்புகள் என்று புலம்பெயர்ந்த தமிழ் சமூகத்தின் மத்தியில் பல்வேறு நிலைபாடுகள் தோற்றுவிக்கப்பட்டன.

இப்பொழுது மறுபடியும் ரணில் ஆட்சிக்கு வந்திருக்கிறார். அவர் தன்னுடைய நல்லாட்சி என்று அழைக்கப்பட்ட ஆட்சி காலத்தில் முன்னெடுத்த அதே நிகழ்ச்சி நிரலை அதாவது தமிழ் புலம்பெயர்ந்த அமைப்புகளின் உதவியோடு ஜெனிவாவைக் கையாள்வது என்ற நிகழ்ச்சிநிரலை முன்னெடுக்கக் கூடும். அதை விட மேலதிகமாக நாட்டில் இப்பொழுது நிலவும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்கு புலம்பெயர் தமிழ் முதலீடுகள் என்ற நோக்கு நிலையில் இருந்தும் செயல்பட முடியும்.

இப்பொழுது வந்திருக்கும் தடை நீக்கம் ரணில் விக்ரமசிங்கவின் முன்னெடுப்பு மட்டுமல்ல. அது ஏற்கனவே கோதாபயவின் காலத்தில் தொடங்கப்பட்டது. ரணில் அதை முடித்து வைத்திருக்கிறார். கோத்தாவும் ரணிலைப் போல முன் கண்ட இரண்டு நிகழ்ச்சி நிரல்களை மனதில் வைத்திருந்தார். ஒன்று ஜெனிவாவைக் கையாள்வது, இரண்டு பொருளாதார நெருக்கடியைக் கையாள்வது.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை ஜெனிவாவைக் கையாள்வது என்பது புலம்பெயர் தமிழ்ச்சமூகத்தை பிரித்துக் கையாள்வதன் மூலம், புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகம் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக அனைத்துலக அரங்கில் முன்னெடுத்து வரும் நீதிக்கான கோரிக்கைகளை பலவீனப்படுத்துவது தான். தடை நீக்கப்பட்டால் ஒரு தொகுதி புலம் பெயர்ந்த தமிழர்கள் நாட்டிற்குள் வந்து போகும் நிலைமை திறக்கப்படும். அவர்கள் தாயககள யதார்த்தத்தோடு நெருங்கி உறவாடும் ஒரு நிலைமை தோன்றும். இவ்வாறு தாயகத்துக்கு வந்து போகக ˙கூடிய வாய்ப்புக்கள் அதிகரிக்கும் பொழுது, அந்த வாய்ப்புகளை எப்படி பாதுகாப்பது என்றுதான் ஒரு தொகுதி புலம்பெயர்ந்த தமிழர்கள் சிந்திப்பார்கள்.தாயகத்துக்கு வந்துபோகும் நிலைமைகளைப் பாதுகாப்பது என்பது அதன் தக்பூர்வ விளைவாக தாயகத்துக்கு வெளியே அரசாங்கத்துக்கு எதிராக செயற்படும் தீவிரத்தை குறைப்பது தான். அரசாங்கத்துக்கு எதிராக நீதியைக் கோரும் போராட்டத்தின் தீவிரத்தை குறைப்பது தான். எனவே தடை நீக்கத்தின் மூலம் வெளியரங்கில் தனக்கு எதிராகச் செயல்படக்கூடிய தமிழ் அமைப்புகள் மற்றும் நபர்களின் தீவிரத்தை அரசாங்கம் குறைக்க முடியும். இது கடந்த நல்லாட்சி என்று அழைக்கப்பட்ட ஆட்சிக் காலத்திலும் அவதானிக்கப்பட்டது.

ஏன் கடந்த சில ஆண்டுகளாகவும் அதைக் காணமுடிகிறது. குறிப்பாக கடந்த ஆண்டு ஜெனிவாவில் ஒப்பீட்டுளவில் குறைந்தளவு பக்க நிகழ்வுகளே இடம் பெற்றதாக ஒரு செயற்பாட்டாளர் தெரிவித்தார்.அ தற்குக் காரணம் பக்க நிகழ்வுகளுக்கு நிதியுதவி புரியும் ஒரு தமிழ் பெருவணிக நிறுவனம் அந்த நிதி உதவியை குறைத்தமை தான் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஏனெனில் அந்த பெருவணிக நிறுவனம் தாயகத்தில் முதலீடுகளை செய்ய தொடங்கி விட்டது. குறிப்பாக தென்னிலங்கையில் வங்குரோத்தான ஒரு சிங்கள கொம்பனியை அது விலைக்கு வாங்கியிருக்கிறது. தாயகத்தில் தனது முதலீடுகளை பத்திரமாக முன்னெடுப்பதற்கு அந்த நிறுவனம் அரசாங்கத்துக்கு எதிரான அதன் போக்கில் தளர்வுகளை ஏற்படுத்த வேண்டியுள்ளது. அதன் விளைவு தான் கடந்த ஆண்டு பக்க நிகழ்வுகளில் அந்த நிறுவனத்தின் நிதிப் பங்களிப்பு குறைவாக காணப்பட்டமையும் என்று மேற்படி செயற்பாட்டாளர் தெரிவித்தார்.

இதைத்தான் அரசாங்கம் எதிர்பார்க்கின ˙றது. தடை நீக்கப்பட்ட அமைப்புகளும் நபர்களும் புலம்பெயர்ந்த தமிழ்ப்பரப்பில் அரசாங்கத்துக்கு எதிராக செயல்படும் தீவிரம் குறையும். இது முதலாவது இலக்கு. இரண்டாவது இலக்கு முதலீடு.

கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் இடைக்கால வரவுசெலவுத் திட்டத்தை முன் வைத்து உரையாற்றிய பொழுது ரணில் விக்கிரமசிங்க புலம்பெயர் நிதியம் ஒன்றை உருவாக்குவது தொடர்பாக யோசனையை முன் வைத்துள்ளார். வெளிநாடுகளில் வாழ்கின்ற இலங்கையர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்கு ஒருங்கிணைப்பு மையமாக தொழிற்படுகின்ற வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கான அலுவலகமொன்றினை ஸ்தாபிக்கப் போவதாகக் கூறியுள்ளார்.

அதாவது புலம் பெயர்ந்து வாழும் இலங்கையர்கள் என்ற பொதுவான ஒரு பதத்தினை அவர் பயன்படுத்துகின்றார். தமிழ் முதலீடு என்ற வார்த்தையை அவர் பயன்படுத்தவில்லை. ஆனால் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் தாயகத்தில் முதலீடு செய்யும்பொழுது அதன் இன ரீதியான பரிமாணத்தை அகற்றி விட்டு வெறும் முதலீடாகச் செய்வது சரியா? அல்லது ஒரு தேசமாக சிந்தித்து தாயகத்தில் தமிழ்த் தேசத்தைக் கட்டியெழுப்புவது என்ற அடிப்படையில் முதலீடு செய்வது சரியா?

புலம் பெயர்ந்து வாழும் தமிழ்மக்கள் உதிரிகளாக வந்து தாயகத்தில் முதலீடு செய்தால் என்ன நடக்கும் ? அது வழமையான திறந்த சந்தைப் பொருளாதாரக் கட்டமைப்புக்குள் நிகழும் ஒரு முதலீடு என்ற பொருளாதார பரிமாணத்தைத் தான் அதிகமாக கொண்டிருக்கும். மாறாக அதற்கு தாயகம் நோக்கிய தமிழ்முதலீடு என்ற இனரீதியிலான பரிமாணமும் பண்பாட்டு ரீதியிலான பரிமாணமும் அல்லது தமிழ்த்தேசிய நோக்கு நிலையிலான பரிமாணமும் குறைவாகவே இருக்கும்.

புலம்பெயர்ந்த தமிழ் முதலீடுகளுக்கு எப்பொழுது தமிழ்த்தேசிய பரிமாணம் அதிகரிக்கிறது என்றால் புலம்பெயர்ந்த தமிழ் முதலீட்டாளர்கள் ஒரு தேசமாக சிந்தித்து முடிவெடுக்கும் போதுதான். ஒரு தேசமாக சிந்திப்பது என்றால் என்ன? ஒரு மிகப்பெரிய மக்கள்திரளாகச் சிந்திப்பது தான். தாயகத்துக்கு வெளியே அவ்வாறு சிந்திப்பது எப்படி? தாயகத்தில் தமிழ்மக்களை ஒரு பெரிய தேசமாகக் கட்டியெழுப்புவது என்ற அடிப்படையில் முதலிடுவது தான்.

அதாவது தாயகத்தில் தேச நிர்மாணத்தின் ஒரு பகுதியாக முதலீடு திட்டமிடப்பட வேண்டும்.மாறாக தனித்தனி வள்ளல்களின் உதவிகளோ, அல்லது தனித்தனி முதலாளிகளின் உதிரியான முதலீடுகளோ, தாயகத்தை கட்டியெழுப்புவது என்ற சமூகப்பொருளாதார அரசியல் பரிமாணத்தை கொண்டிருக்க போவதில்லை.

எனவே இப்பொழுது இக்கட்டுரை தொடங்கிய இடத்துக்கே வரலாம். எனது நண்பர் கேட்டது போல புலம் பெயர்ந்த தமிழ்ச்சமூகம் முதலீட்டை ஒரு கூட்டுச் செயற்பாடாக செய்வதற்கான வாய்ப்புகள் அநேகமாக இல்லை. புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகம் ஒரு தேசமாக சிந்தித்து முதலீடு செய்யப் போவதில்லை என்ற எதிர்பார்ப்பில் தான் அரசாங்கம் இந்தக் கொழுக்கியை வீசியிருக்கிறது. புலம் பெயர்ந்த தமிழ் முதலாளிகள் உதிரிகளாக நாட்டுக்குள் முதலீடு செய்ய வேண்டும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

அதாவது ரணில் விக்கிரமசிங்க புலம் பெயர்ந்த தமிழர்களை நோக்கி ஒரு பொறியை வைத்திருக்கிறார் என்று பொருள். அந்தப் பொறிக்குள் தமிழ் நிதி உதிரியாக வந்து சிக்குமா?

# ஜெனிவாவில் நடைபெறப் போவது என்ன?

**கட்டுரையாளர்:**
ஈழநாட்டிற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து
**– பார்த்தீபன் –**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில், இலங்கை விவகாரம் சூடு பிடித்துள்ளது. ஆணையாளரின் காட்டமான அறிக்கை வெளியாகியுள்ளது. முதல் தடவையாக பொருளாதாரக் குற்றங்களுக்கு பொறுப்புக் கூறல் என்ற விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளது. திங்கட்கிழமை காலை ஆணையாளரின் அறிக்கை உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும். மாலையில் இலங்கை அதற்குப் பதலளிக்கப் போகின்றது.

வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி வெளிநாட்டு பொறிமுறையை அரசு ஒருபோதும் ஏற்காது என்று குறிப்பிட்டுள்ளார். மறுபுறத்தே இதன் காரணமாக சர்வதேச சமூகமும் மனித உரிமை மீறல்கள் குறித்த இலங்கை மீதான குற்றச்சாட்டுகளை இலகுவில் ஒதுக்கி விடப் போவதில்லை என்பதையும் இலங்கை தெரிந்து கொண்டுதான் உள்ளது. ஆதாரங்களைச் சேகரிப்பதற்கான சா்வதேச பொறிமுறையும் இலங்கைக்கு நெருக்கடியைக் கொடுக்கும் ஒன்றாக அமையப்போகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இலங்கையில் கடந்த காலங்களில் போர் குற்றச்சாட்டுகள் என்று கருதப்பட்டவை தொடர்பாக நீதி விசாரணைக்கான பொறிமுறை ணன்றை உருவாக்கி நல்லிணக்க செயல்பாடுகளை பலப்படுத்தும் விதத்திலேயே இலங்கை குறித்த தீர்மானங்களை நிறைவேற்றியிருந்தது. 2015 முதல் ஆட்சியிலிருந்த நல்லாட்சி எனப்படும் மைத்திரி – ரணில் அரசு அதனை ஏற்றுக்கொண்டிருந்தது. ஆனால், இப்போது அதனை ஏற்றுக் கொள்வதற்கு ரணில் தயாராகவில்லை. காரணம் – உள்நாட்டு அரசியல்.



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கே சவால் விடும் விதத்தில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, வெளிநாட்டு பொறிமுறையை இலங்கையின் போர் குற்றங்கள் என்று குறிப்பிட்டவை தொடர்பாக ஏற்கப்போவதில்லை என்று கூறியுள்ளார். சர்வதேச சமூகத்துடனும் இலங்கை சவால்விடும் வகையில் கருத்து வெளியிட்டுள்ளதையே காண முடிகின்றது. உள்நாட்டு அரசியலில் உருவாகக்கூடிய சவால்களை சமாளிக்க அரசு இவ்வாறு செயற்படுகின்றது என்பது புரிந்து கொள்ளக் கூடிய ஒன்று தான்.

நல்லிணக்கத்துக்கான யோசனைகள் உட்பட போர் குற்றங்கள் என்று கருதப்பட்டவை தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்கும் விதத்திலேயே நீதி விசாரணைக்கான சர்வதேச பொறிமுறை ஒன்றை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தனது இலங்கை குறித்த தீர்மானங்களில் கொண்டு வந்திருந்தது.

ஆனால், இது விடயத்தில் முழுமையாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தீர்மானங்களை இலங்கை நிறைவேற்றாதிருப்பதோடு போர்க் குற்றங்கள் என்று கருதப்பட்டவை தொடர்பாகவும் சர்வதேச பொறிமுறையோடு கூடிய விசாரணைகளை மேற்கொள்வதில் இலங்கை தாமதங்களுக்கு இடமளித்துள்ளது. இதன் மூலம்




இலங்கை சர்வதேச சமூகத்தால் வெகுவாகவே குறைத்து மதிப்பிடப்படும் ஒரு நிலையை உருவாக்கி வருவதோடு நல்லிணக்க செயல்பாடுகளில் போதிய உத்வேகத்தை காட்டாதிருப்பதையும் சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்தியுள்ளது.

மேற்குலகுக்குச் சார்பான லிபரல் முகத்தைக் கொண்ட ரணில் விக்கிரமசிங்கவின் அணுகுமுறை இவ்விடயத்தில் வித்தியாசமானதாக இருக்கும் எனக் கருதப்பட்டாலும், உள்நாட்டில் உருவாகக்கூடிய நெருக்கடிகளைத் தாண்டிச் செல்வதற்கு அவர் துணியமாட்டார். ராஜபக்சக்களின் தயவில் ஜனாதிபதிப் பதவியில் தொடரும் அவர் ஜெனீவாவில் லிபரல் முகத்தைக் காட்டுவதன் மூலமாக ராஜபக்சக்கள் மீண்டும் எழுச்சி பெறுவதற்கு இடமளிக்கத் தயாராகவில்லை. அடுத்த தேர்தலை இலக்கு வைத்து அவர் செயற்படுகின்றார். அதனால் இவ்விடயத்தில் நிதானமாகவே அவர் செயற்படுவார் என்பது எதிர்பார்க்கக் கூடியது தான். மேற்கு நாடுகளும் இந்த நிலைமையைப் புரிந்து கொண்டேயுள்ளன. இவ்வாறான ஒரு அணுகுமுறையின் மூலமாக சிங்கள மக்கள் மத்தியில் தமது ஆதரவுத் தளத்தைப் ரணில் பலப்படுத்துவதை மேற்கு நாடுகளும் விரும்பலாம்.

இலங்கையின் ஆட்சியாளர்கள் நாட்டு மக்கள் அனைவராலும் நம்பத்தகாதவர்களாக இருப்பதையும் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு அவர்களின் தவறான ஊழல், மோசடிகள் நிறைந்த அரச நிர்வாகங்களே முக்கிய காரணங்கள் என்பதுவும் சர்வதேச சமூகம் முன்பாக நிரூபணமாகியுள்ளது. இந்தப் பின்னணியில் தான் பொருளாதாரக் குற்றஞ்களுக்கு பொறுப்புக்கூறல் என்ற விவகாரத்தையும் மனித உரிமைகள் ஆணையாளர் இப்போது கைகளில் எடுத்திருக்கின்றார்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இலங்கையில் போர்க் குற்றங்கள் என்று கருதப்பட்டவை தொடர்பாக சர்வதேச நீதிப் பொறிமுறையொன்றை இலங்கை ஏற்கப்போவதில்லை என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால், இத்தகைய நீதிப்பொறிமுறை ஒன்றை இலங்கை ஏற்காத வரை சர்வதேச சமூகம் முன்பாக இலங்கை தனது செல்வாக்கை பெரிதும் இழக்கும் நிலையே உருவாகும் என விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள். இதனால் தான் ஒரு வாரம் முன்கூட்டியே ஜெனீவா சென்று தமது நகர்வுகளை இலங்கைக்குழு ஆரம்பித்திருக்கின்றது.

தற்போதைய சர்வதேச நிலவரங்களைப் பொறுத்தவரை சர்வதேச சமூகத்தின் உதவி ஒத்தாசை என்பவற்றைப் பொறுத்த வரை அடிப்படை மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட விடயங்களும் முன்னிலைப்படுத்தப் பட்டவையாக இருக்கின்றன. சர்வதேச சமூகம் இலங்கையை அனுதாப கண் கொண்டு பார்க்கும் நிலையே காணப்படுகின்றது. இதன் காரணமாகவே இலங்கையின் மனித உரிமைகளை மேம்படுத்தும் விதத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் பல தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. ஆனால், இந்தத் தீர்மானங்களையும் இலங்கை புறக்கணிக்கும் பட்சத்தில் இலங்கை பொருளாதார ரீதியான மேம்பாடுகளையும் எதிர்பார்க்க முடியாமல் போகலாம் என்ற கருத்தும் உள்ளது.

தனது பொருளாதார உறுதிப்பாட்டுக்காக உலக நாடுகளில் வாழ்கின்ற புலம்பெயர்ந்த வடக்கு – கிழக்கு தமிழர்களையும் இலங்கை எதிர் பர்க்கின்ற நிலையும் ஏற்பட்டுள்ளது. புலம் பெயர்ந்த தமிழர்களைப் பொறுத்தவரை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தீர்மானங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்றே அவர்கள் எதிர்பார்ப்பார்கள். இரண்டாவது, அதிகாரப் பரவலாக்கல் மூலமாக மாகாண சபைகளுக்கு நிதி அதிகாரங்கள் வழங்கப்படுவதையும் அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். அவை நடை பெறாத பட்சத்தில் மத்திய அரசாங்கத்தை நம்பி புலம் பெயர்ந்த மக்கள் முதலீடுகளை மேற்கொள்ள தயாராகவில்லை.

இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையில் நல்லிணக்கம் தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு உரிய முக்கியத்துவத்தை வழங்காதவரை நெருக்கடியை நோக்கியே இலங்கை செல்ல வேண்டியிருக்கும். ஜெனீவாவில் நிறைவேற்றப்படும் தீர்மானம் கடுமையானதாக இருந்தாலும், அதனை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் ரணிலைப் பாதுகாக்கும் வகையில் மனித உரிமைகள் பேரவை செயற்படும் என நம்புவதற்கே இடமுள்ளது.

**அன்பு இல்லக் குழந்தைகளின்**
**வாழ்வுக்காகவும் வாழ்வாதாரத்திற்காகவும்**
**உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை**
**நடாத்தும் 10வது ஆண்டு விழா**
**தமிழக – ஈழத்தமிழக பாடகர்களுடன்**
**இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்**
**23 ஒக்டோபர் 2022 ஞாயிறுக்கிழமை**
**தொடர்புகளுக்கு:- 416 841 9600**

# கடன் வாங்கி கல்யாணம் செய்யும் காலமல்ல!

நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு ஐ.எம்.எவ்வின் நிதி உதவி உதவும். இதற்கு ஐ.எம்.எவ் உத்தியோகத்தர் மட்டத்தில் இணக்கம் தெரிவித்துள்ளது. அடுத்த ஆறு மாதத்தில் முதற் கட்டமாக கடனுதவி நிதி கிடைத்து விடும். நான்கு ஆண்டுகளுக்கு இந்த நிதி உதவி தொடரும். ஆகவே இனிப் பிரச்சினை இல்லை என்ற எண்ணத்தோடு தான் பெரும்பாலானவர்கள் உள்ளனர்.

இதுவரையிலும் நாடுகளிடம் கடன் பட்டு வாழ்ந்து பழக்கப்பட்டவர்களுக்கு இன்னொரு கடனைப்படுவதில் எந்தப் பிரச்சினையுமில்லை. கடன் வாங்கிக் கலகலப்பாகக் கல்யாணம் செய்வதைப் போலவே நாம் வாழ்ந்து பழக்கப்பட்டு விட்டோம். இதனால் எந்தக் கடனும் நமக்குப் பிரச்சினையாகப் படுவதில்லை.

ஆனால், இந்தக் கடன் சாதாரணமானதல்ல. நாடுகளின் கடனிலாவது, அந்த நாடுகளின் அரசியல் தலைமைகள், ஆட்சிக் கொள்கைகளுக்கு அமைய விலக்களிப்பதாகவோ வட்டிக் குறைப்புச் செய்வதாகவோ இருக்க வாய்ப்புண்டு. இது நிதி நிறுவனக் கடன். ஆகவேதான் கடனைத் தருவதற்கு முன்பே நிபந்தனை விதிக்கப்படுகிறது. நிபந்தனைக்குக் கட்டுப்பட்டால் தான் கடன். அதுவும் தவணை அடிப்படையில். ஆகவே இந்தக் கடனோடு விளையாட முடியாது. கழுத்தில் சுருக்குத்தான் விழும்.

அப்படியென்றால் என்ன செய்ய வேண்டும்? என்று நீங்கள் கேட்கிறீர்கள்.

ஆம், அந்தக் கேள்வி உங்களுக்கானதே.

முதலில் இப்போது ஏற்பட்டிருப்பது ஒரு மிகப் பெரிய தேசிய நெருக்கடி என்பதை நாம் புரிந்து (உணர்ந்து) கொள்ள வேண்டும். இலங்கையின் வரலாற்றில் முன்னெப்போதும் நிகழ்ந்திருக்காத ஒன்று. நாம் இப்பொழுது வங்குரோத்து நிலையில் இருக்கிறோம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாகவே கூறியுள்ளதை நாம் ஊன்றிக் கவனிக்க வேண்டும். உண்மையும் அதுதான். ஆகவே தான் உலகம் முழுவதிலும் நாம் பிச்சைப் பாத்திரத்தை ஏந்த வேண்டியேற்பட்டுள்ளது.

ஆனால், இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் மிகச் செழிப்பாக இருந்த நாடு. அதனுடைய அந்நியச் செலாவணி பிற நாடுகளுக்கு உதவும் நிலையில் தாராளமாக இருந்தது. குறிப்பாக ஜப்பான், ஜேர்மனி போன்ற நாடுகளின் பொருளாதார நிலையை விட இலங்கை பல படிகளில் மேலே நின்றது. இவ்வளவுக்கும் அது 400 ஆண்டுகளுக்கும் அதிக காலம் அந்நியரின் பிடியின் கீழிந்த காலமாகும். அப்படியிருந்தும் பொருளாதார வளம் மேலோங்கியிருந்தது.

அதற்குப் பின்னர் இலங்கையை ஆட்சி செய்த நம்மவர்கள் இன்றைய வங்குரோத்து நிலைக்கு நாட்டைக் கொண்டு வந்து விட்டுள்ளார்கள். கடன் சுமையில் நாடு திக்குமுக்காடிக் கொண்டிருக்கிறது. போதாக்குறைக்கு இன்னும் கடன் பொறிக்குள்ளே தான் நாட்டைக் கொண்டு போவதற்கு முயற்சிக்கிறார்கள். கேட்டால், வேறு வழியில்லை என்று ஒற்றைச் சொல்லில் கதையை முடித்து விடப்பார்க்கிறார்கள்.

ஆனால், நாடு மிகப் பெரிய தேசிய நெருக்கடிகளால் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. முக்கியமாக இரண்டு நெருக்கடிகளால் (பிரச்சினைகளால்). ஒன்று பொருளாதார நெருக்கடி. அடுத்தது இனப்பிரச்சினை.

இந்த இரண்டுமே ஒன்றோடு ஒன்று தொடர்பு பட்டவை. ஒன்றை விட்டு ஒன்றைச் சீர் செய்ய முடியாது. பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதற்கு போரும் அதற்கான செலவும் ஒரு காரணம் என்றால், நாட்டில் பிளவுண்ட சமூக நிலை தொடர்வது இன்னொரு காரணம். ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்பது எளிய உண்மை.

ஆனால், இந்த எளிய உண்மை இனவாதத்தினால் புறக்கணிக்கப்பட்டு, நான்காகத் துண்டுபட்டால் உண்டு வாழ்வு என்று செயற்பட்டதன் விளைவே இன்றைய நெருக்கடியாகும்.

தேசிய நெருக்கடி என்பது அனைவரையும் பாதிக்கும் ஒன்றாகும். இனம், மதம், பிரதேசம், சாதி, பால், வயது என எந்த வேறுபாடுகளையும் அது பார்க்காது. ஆகவே அவ்வாறான தேசிய நெருக்கடியை எதிர்கொள்வதற்கு அனைத்துத் தரப்பினரின் பங்கேற்பும் அவசியமானது. இல்லையென்றால் அந்த நெருக்கடியைக் கடக்கவோ முறியடிக்கவோ முடியாது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி, மிகப் பாரிய சிக்கலை உண்டாக்கியுள்ள ஒன்று. நாளாந்த உணவுப் பொருட்களுக்கே பல லட்சக்கணக்கான




மக்களைச் சிரமப்பட வைத்துள்ளது. பல தொழில்துறைகள் படுத்து விட்டன. விலை வாசியும் மின்சாரம், நீர் போன்றவற்றின் பாவனைக் கட்டணங்களும் மிக உச்சத்துக்கு ஏறியுள்ளன. மருந்துப் பொருட்களுக்கு மிகப் பெரிய பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. நலத்திட்டங்கள் அனைத்தும் படுத்துக் கொண்டிருக்கின்றன. அபிவிருத்தி என்ற பேச்சுக்கே இடமில்லை என்றாகி விட்டது. வசதிகளைக் குறைக்குமாறு அரசு மக்களுக்கு ஆணையிடும் அளவுக்கு நிலைமை வந்துள்ளது. தேவையற்ற செலவீனங்களைக் குறையுங்கள் என்று ஜனாதிபதி கெஞ்சுகிறார். அடுத்த ஆண்டைக் கடப்பது கடினமானது என்று அரசாங்கம் மக்களுக்கு எச்சரிக்கை செய்துள்ளது.

இப்படியெல்லாம் இருந்தாலும் சனங்கள் இன்னும் வழமையைப் போலவே வாழ முற்படுகிறார்கள். பொருட்களை வாங்கிச்சேகரிக்க முற்படுகிறார்களே தவிர, புதிய சூழலை உருவாக்க முயற்சிக்கவில்லை. எந்தச் செலவீனத்தையும் குறைத்ததாகக் காணவில்லை. நிலைமையைக் கருத்திற் கொண்டு வாழ்க்கை முறையில் மாற்றத்தைச் செய்வதற்கான எந்த அடையாளமும் தெரியவேயில்லை.

வருமானத்தைக் கூட்டுவதற்கான வழிகளையும் காணவில்லை. இதுதான் ஆகப் பெரிய பிரச்சினை. செலவு வரவரக் கூடிச் செல்கிறது. அதேவேளை வருமானமோ வரவரக் குறைந்து கொண்டு போகிறது. அதிலும் விவசாயம், மீன்பிடி போன்ற தொழிலில் ஈடுபடுகின்றவர்களின் பாடு மிகச் சிக்கலானது. அவர்கள் தொழிலைச் செய்வதற்கான அடிப்படை ஆதாரங்களே இல்லை என்ற நிலையில் அவர்களால் எப்படித் தொழிலைச் செய்ய முடியும்? ஆகவே அவ்வாறான குடும்பங்களின் பொருளாதாரம் படு நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. ஒருவேளை உணவுக்கே சிரமப்படுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை ஐந்து லட்சத்தைக் கடந்து விட்டது என்கிறது ஒரு புள்ளி விவரம். இந்த நிலையில் நாம் நிச்சயமாக ஒரு மாற்றுப் பொருளாதார முறைமைக்கும் மாற்று வாழ்க்கை முறைக்கும் செல்ல வேண்டும். இது ஒரு பண்பாடாக வளர்த்தெடுக்கப்படுவது அவசியம். எதுவும் பழக்கப் பட்டால் சரியாகி விடும் என்பார்கள். மனிதனே ஒரு பழக்கத்திற்கு இசைவான பிராணிதான். இதுவரையான வாழ்க்கை முறையை விட்டு புதிய வாழ்க்கை முறைக்குப் பழகினோம் என்றால் பாதிப்பிரச்சினையை எளிதாகக் கடந்து விட முடியும்.

முக்கியமாக சுய உற்பத்தி சார்ந்த உணவு தொடக்கம் பாவனைப்பொருட்கள் வரையில் நாமே தயாரிக்க வேண்டும், உற்பத்தி செய்ய வேண்டும் என்ற உணர்வோடு அனைவரும் வேலை செய்ய வேண்டும். இதற்கும் பிரச்சினை உண்டென்பது உண்மை. குறிப்பாக உற்பத்தித்துக்குத் தேவையான மின்சாரம், எரிபொருள் போன்றவை சீரில்லாதிருக்கும் போது எப்படி உற்பத்தியில் ஈடுபட முடியும்? என்று யாரும் கேட்கலாம். நெருக்கடி என்றாலே அப்படித் தான். சிக்கலும் சிரமங்களும் அதிகமாக இருக்கும். அதற்குத் தான் இப்பொழுது பெறப்படுகின்ற கடனை எப்படி முகாமைத்துவம் செய்வது என்பதைக் குறித்த கரிசனை வேண்டும் என்கிறோம். உற்பத்தித் துறைக்கும் சுற்றுலா போன்ற வருவாய்த் துறைக்கும் கூடுதல் முக்கியத்துவத்தை அளிப்பதன் மூலமாக இதைச் சரிசெய்து கொள்ள முடியும்.

இளைய தலைமுறையினர் இதில் அதிகமான பங்களிப்பைச் செய்வது அவசியம். அவர்கள் புதிதாக வித்தியாசமாகச் சிந்திக்கக் கூடியவர்கள். இலகு தன்மைகளை உண்டாக்கும் ஆற்றலுடையவர்கள். ஆகவே நாட்டை நாம் மீட்டெடுப்போம். ஒரு புதிய யுகத்தைப் படைப்போம் என்று அவர்கள் செயலில் இறங்க வேண்டும். இதற்கு இளைய தலைமுறையை ஊக்கப்படுத்தும் வேலைத்திட்டம் அவசியம். தீர்மானங்களை எடுக்கின்ற இடங்களிலும் அவர்களுக்கான இடம் அளிக்கப்படுவது அவசியம்.

அவர்களுக்கான வாய்ப்புகளை வசதிகளை தாராளமாக அளிக்க வேண்டும். அவர்கள் நினைத்தால் இந்த நாட்டை மிகக் குறுகிய காலத்தில், மிகச் சிறப்பான முறையில் மீட்டெடுப்பார்கள். அத்தகைய ஆற்றல் இளைய தலைமுறையினரிடத்தில் உண்டு. உலகிலே உற்பத்தித் துறையில் ஈடுபடுகின்றவர்களில் 80 வீதமானோர் இளையோரே. ஆகவே இந்த உலகத்தை இயங்க வைப்பது இளைய தலைமுறையினரே. அவர்களை நாம் சரியாக ஏற்றுக் கொண்டால் அவர்கள் நாட்டை வளர்த்தெடுப்பார்கள்.

இப்பொழுது 25 வயதுக்குட்பட்ட இளைஞர் யுவதிகளில் பெரும்பாலானோர் எந்தத் தொழிலும் இல்லாமல், உயர் கல்வியைத் தொடராமல் சும்மாவே உள்ளனர். அவர்களுடைய கைகளில் செல்∴போனும் தலைக்குள்ளே யூ ரியுப் காட்சிகளுமே நிறைந்துள்ளன. இதற்கு அவர்களைக் குறை சொல்லிப் பயனில்லை. அவர்கள் படிக்கின்ற காலத்திலேயே வேலையைச் செய்யக் கூடிய ஏற்பாடு நாட்டில் இருக்க வேண்டும். இன்று பல லட்சம் பேருக்கு வேலையே இல்லை. வேலையில்லாத பட்டதாரிகளை வைத்திருக்கும் நாடு அல்லவா

கட்டுரையாளர்:
கிளிநொச்சியில் இருந்து
– கருணாகரன் –



நமது! வேலையில்லாத இளையோரையும் அப்படித் தான் வைத்திருக்க முயற்சிக்கும். பழக்க தோசம் அப்படி.

ஆனால், அதற்கு இனிச் சாத்தியமே இல்லை. இனி ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும். முன்பை விட இரண்டு மடங்கு, பல மடங்கு உழைக்க வேண்டும். வருவாயைப் பெருக்க வேண்டும். இதை ஒரு அவசரகால நிலையாக அரசாங்கம் பிரகடனப்படுத்துவது அவசியம். அரச உத்தியோகத்தர்களின் பணித் தன்மை தொடர்பாகவும் பணி நேரம் தொடர்பாகவும் புதிய முறையில் சிந்திக்க வேண்டும். அனைவரும் ஒரு குறுகிய காலத்திற்காவது பொருளாதார மேம்பாட்டுக்குப் பங்களிக்க வேண்டும் என்ற கட்டாய நிலை கொண்டு வரப்படுவது அவசியம். சில நாடுகளில் இருக்குமே, கட்டாய இராணுவப் பயிற்சி. அதைப்போல, இங்கே கட்டாயப் பொருளாதார மீட்சித்திட்டத்தில் பங்கேற்பு என்ற திட்டத்தைக் கொண்டு வருவது அவசியம்.

ஏனென்றால் ஏற்கனவே நாம் வாங்கியது கடன். வாங்கிக் கொண்டிருப்பதும் கடன். வாங்கப் போவதும் கடன். ஆகவே இந்தக் கடன்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். கொடுத்தே ஆக வேண்டும். தப்ப முடியாது. இல்லையென்றால் தேவையில்லாத பிரச்சினைகள் எல்லாம் வரும். மேலும் பல தடைகளையும் இறுக்கங்களையும் நாம் சந்திக்க வேண்டியிருக்கும். அது நம்முடைய எதிர் காலத்தையே இல்லாதொழித்து விடும். இப்போதைய நிலையை விட மோசமான நிலையை உண்டாக்கும் என்ற புரிதல் எச்சரிக்கை வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனியொரு ஆளாக நின்று பதவிகளை எடுத்துக் கொண்டவர், ஏற்றிருப்பவர். இன்று அரசியற் சவால்கள், நெருக்கடிகளுக்கு மத்தியில் நின்று நாட்டை நிர்வகிக்கிறார். இந்த இடத்தில் அவர் மேலும் சில விடயங்களைக் குறித்துத் துணிவாகவும் சரியாகவும் சிந்திக்க வேண்டும். அது காலத்தின், களத்தின் அவசியமாகும். அப்படிச் செய்தால் உண்மையில் அவர் வரலாற்றுத் தலைவராக காலத்தினால் நினைவு கொள்ளப் படுவார்.

தேசிய பொருளாதாரக் கொள்கையை அவர் சிறப்பான முறையில் உருவாக்க வேண்டும். பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கின்ற ஊழல், இனமுரண், அரசியல் முரண்பாடுகள், பொருத்தமற்ற பொருளாதாரத் திட்டங்கள் போன்றவற்றைக் கடக்கக் கூடிய அடிப்படைகளை உருவாக்க வேண்டும். அவரால் இவற்றைச் செய்ய முடியும். அதைச் செய்யக் கூடிய காலமும் இதுதான்.

(20ம் பக்கம் பார்க்க)

# நீளும் யுவான் வாங் சர்ச்சை!

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
-கேணல் ஹரிகரன் -



மழை விட்டும் தூவானம் ஓயாதது போல, ‘யுவான் வாங்– 5’ என்ற சீன ஆய்வுக் கப்பலைச் சுற்றிய சர்ச்சைகள் நீண்டு கொண்டே செல்கின்றன.

‘யுவான் வாங் 5’ கப்பலின் பயணத்தை ஒட்டிய இராஜதந்திர போர் இன்னமும், இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் நடந்து கொண்டிருக்கிறது.

இரண்டு நாடுகளின் இராஜதந்திரிகளும், அறிக்கைப் போரை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அது ஒரு பக்கத்தில் இருக்க, ‘யுவான் வாங் 5’ கப்பலின் நகர்வுகளை ஒட்டிய ஒரு பாதுகாப்பு, புலனாய்வுப் போர், இன்னமும் நடந்து கொண்டிருக்கிறது.

யுவான் வாங்5 கப்பலை ஒட்டி இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் நடந்து கொண்டிருக்கும் நிழல் போரை மூன்று பகுதிகளாக பிரிக்கலாம்.

ஒன்று, அதன் பயணம் அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து, அம்பாந்தோட்டை துறைமுகத்தை அடையும் வரையிலான காலப்பகுதி.

இரண்டு, அம்பாந்தோட்டையில் தரித்துள்ள காலப்பகுதி,

மூன்று, அம்பாந்தோட்டையில் இருந்து புறப்பட்டு, அது சீனாவின் ஜியான்ஜிங் துறைமுகத்துக்கும் திரும்பும் வரையான காலப்பகுதி. ஜீலை 13ஆம் திகதி ஜியான்ஜிங் துறைமுகத்தில் இருந்து புறப்பட்டு, அம்பாந்தோட்டை துறைமுகத்தை அடையும் வரை, ‘யுவான் வாங் 5’ கடுமையான சவால்களை எதிர்கொண்டது.



இந்த கப்பலின் பயணம் பற்றி பகிரப்பட்ட தகவல்கள், செய்திகள் காரணமாக, இணையத்தில் அதிகளவில் தேடப்பட்ட கப்பல்களின் வரிசையில் இடம்பெற வைத்தது.

செய்மதி மற்றும் ஏவுகணை வழித்தட கண்காணிப்புக் கப்பலான ‘யுவான் வாங் 5’ இல் மேலதிகமாக உள்ள கண்காணிப்பு மற்றும் புலனாய்வு வசதிகள் மற்றும் கருவிகள் தொடர்பான எந்த துல்லியமான தகவல்களும் கிடையாது.

சீனாவிடம் உள்ள எந்த கப்பல்கள், விமானங்கள், மற்றும் ஆயுதங்கள் தொடர்பாகவும், வெளிப்படையான தரவுகள் பகிரப்படுவதில்லை.

இந்தியா சீனக் கப்பலின் வருகை தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என்று, வெளிப்படையாக எச்சரித்து, தடுக்க முயன்றது.

ஆனால் சீனா அதற்கு இடமளிக்காமல், முரண்டு பிடித்ததுடன், தனது கடன்பொறி இராஜதந்திரத்தைக் கையாண்டு எப்படியும் அம்பாந்தோட்டையில் நிறுத்த முயன்றது.

இந்தக் கட்டத்தில் தான், இந்தியா கப்பலைத் தடுப்பதில் கவனம் செலுத்தாமல், அந்தக் கப்பலின் செயற்பாட்டை முடக்குவதில் கவனம் செலுத்த முடிவு செய்தது.

சீனக் கப்பலின் நோக்கம், இந்தியாவை உளவு பார்ப்பது தான் என்ற நிலையில், அந்த இலக்கை அடைய விடாமல் தடுப்பது தான், இந்தியாவின் நோக்கமாக இருந்தது.

அதற்காக இந்தியா தனது நான்கு செய்மதிகளையும், ஒரு கண்காணிப்புக் கப்பலையும் பயன்படுத்தியதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

இந்தியப் பெருங்கடலில் அச்சுறுத்தல்களைக் கண்காணிக்க, இந்தியக் கடற்படையின் இரண்டு கண்களாகக் கருதப்படும், **GSAT** 7 (ருக்மிணி) செய்மதிகள் இரண்டும், வானிலையைக் கண்காணிக்கும், **RI SAT**



(இந்திய ரேடர் கண்காணிப்பு செய்மதி) ஒன்று, இந்தியாவின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு உருவாக்கிய எமிசாட் உளவு செய்மதி ஆகிய நான்கு செய்மதிகளுடன், அரபிக் கடலில் ஒரு தகவல் தொடர்பு போர்க்கப்பல் என்பன, நிலை நிறுத்தப்பட்டிருந்தன.

இதன் மூலம், ‘யுவான் வாங் 5’ கப்பலில் இருந்து, உளவுப் பணியை மேற்கொள்ள முடியாத மின்னணு சமிக்ஞைகள் அனுப்பப்பட்டு, அதன் செயற்பாடுகள் முடக்கப்பட்டதுடன், அதனை கண்காணிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக இந்திய பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி தகவல்கள் வெளியாகியிருந்தன. அம்பாந்தோட்டையில் கடந்த 16ஆம் திகதி கப்பலை நங்கூரமிட அனுமதிக்க முன்னரே, இலங்கை கடற்பரப்பில் ஆய்வுகளை மேற்கொள்ளக் கூடாது என்றும், இலங்கை கடல் எல்லைக்குள் நுழைந்ததும் அனைத்து, கருவிகளும் செயற்பாட்டை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது.

இந்த நிபந்தனையை சீனா நிறைவேற்றியிருந்தால், இந்தியா தனது செய்மதிகளைக் கொண்டு அதன் செயற்பாட்டை நிறுத்தியிருக்கவோ, நிறுத்த வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கவோ மாட்டாது.

அதேவேளை, இந்தியப் பெருங்கடலில் ‘யுவான் வாங் 5’ கப்பல், இந்தியாவில் குரல் மாதிரிகளை சேகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கலாம் எனவும் சந்தேகம் எழுந்திருக்கிறது.

அடையாளம் தெரியாத காரணத்துக்காக, இந்தியர்களின் குரல் மாதிரிகளை சீன புலனாய்வு அமைப்பு சேகரிப்பதாக, நேற முவைந னுயவய டுயடிள என்ற அமெரிக்க சிந்தனைக் குழாம் தெரிவித்திருக்கிறது.

சீனா தனது பெரிய கண்காணிப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக, தனது சொந்த மக்களின் குரல் மாதிரிகளை சேகரித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

ஒவ்வொரு சீன குடிமகனின் முகம், மரபணு மாதிரி, குரல் மாதிரிகள் வரை, முழு டிஜிட்டல் சுயவிவரத்தை உருவாக்க சீனா முற்படுகிறது.

இவ்வாறான நிலையில் இந்தியர்களின் குரல் மாதிரிகளை பதிவு செய்யும் பணியில் யுவான் வாங்– 5 கப்பல் ஈடுபடுத்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகங்களும் உள்ளன.

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட பின்னர், யுவான் வாங் 5 இரகசியப் போர் மூன்றாவது கட்டத்தை அடைந்திருக்கிறது.

குறித்த கப்பலை தேடு தளங்களில் தேடினால் அது, ஜீலை மாதம் 14ஆம் திகதி கிழக்கு சீனக் கடலில் பயணம் செய்து கொண்டிருந்த போது, காணப்பட்ட இருப்பிடத்தை தான் காட்டுகிறது. அதற்குப் பின்னரான, பதிவுகள் இடம்பெறவில்லை. இதனால் சீன ஆய்வுக் கப்பல் தனது பயணத் தடத்தை பகிரங்கமாக அறியக்கூடிய ஜிபிஎஸ் கருவிகளின் செயற்பாட்டை நிறுத்தி வைத்திருக்கிறது.

செப்டெம்பர் 16ஆம் திகதி அது மீண்டும் ஜியான்ஜிங் துறைமுகத்துக்கு திரும்பவுள்ளதாக மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், கடந்த 22ஆம் திகதி அம்பாந்தோட்டையில் இருந்து புறப்பட்ட சீனக் கப்பல், மெதுவாக ஆழ்கடலை நோக்கிப் பயணித்து, இந்தியப் பெருங்கடலில் நிலை கொண்டு, ஆய்வுகளை முன்னெடுத்திருக்கிறது.

சில நாட்களுக்கு முன்னர், அந்தக் கப்பல், இலங்கைக்குத் தெற்கே 2000 கிலோ மீற்றர் தொலைவில் ஆய்வுப் பணியில் ஈடுபட்டிருப்பதாக இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருந்தன.

இந்தக் கப்பல் மலாக்கா, சுந்தா, லொம்பேக் நீரிணைகள் வழியாக சீனாவுக்குத் திரும்பும் என்று, எதிர்பார்க்கப்பட்டது. அந்தமான் நிகோபார் தீவுகளிலுள்ள இந்திய கடற்படைத் தளங்களுக்கு அண்மையாக உள்ள இந்தக் கடல் பாதை, இந்தியாவின் உளவு செய்மதிகள் மற்றும் ராடர்களின் கண்காணிப்பு எல்லைக்குள் அமைந்துள்ளன. இதனால் கப்பலை இந்தியா தொடர்ந்து கண்காணிக்கும் என்ற நிலையில், தற்போது சீன ஆய்வுக் கப்பலின் பயணப் பாதை மேற்கு நோக்கித் திருப்பப்படலாம் என்று எதிர்வு கூறப்பட்டிருக்கிறது.

கிழக்கு ஆபிரிக்கா நோக்கிய இதன் புதிய பயணப் பாதையானது தென் சீனக் கடலில் இருந்து பாரசீக வளைகுடா மற்றும் ஏடன் வளைகுடா வரையிலான குறுகிய கடல் பாதைகளை முற்றிலும் தவிர்த்து, ஓம்பை வெட்டார் நீரிணை வழியாக நீண்ட பாதையில் இருக்கக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜிபுட்டியில் சீனா பாரிய கடற்படைத் தளத்தை அமைத்திருக்கிறது. அங்கு அல்லது அதனை அண்டிய பகுதியில், ‘யுவான் வாங் 5’ கண்காணிப்பை மேற்கொள்ளலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, சீனா எதற்காக பாரம் பரிய பாதையை தவிர்த்து நீண்ட தூரப் பாதையை தெரிவு செய்திருக்கிறது என்ற கேள்வி எழுகிறது. இந்தியாவின் கண்காணிப்புத் திறன் குறித்த அச்சம் அதற்குக் காரணமாக இருக்கக் கூடும்.

சிவமயம்

ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
“இணுவில் திருவூர்”
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# சீனாவால் கட்டமைக்கப்படும் இலங்கை - இந்திய உறவு!

இலங்கை இந்திய உறவு சீனா வின் அணுகுமுறையால் நெருக்கடிக்குள் நகர்வதாக தெரிகிறது. அதனை சரி செய்ய இலங்கைக்கான இந்தியத் தூதுவர் மிலிந்த மொரகொட அதிக பிரயத்தனத்தை மேற் கொள்வதையும் இந்தியாவுக்கும் திருகோணமலைக்கும் இடையிலான எரிவாயு குழாய்த் திட்டத்தை பற்றிய உரையாடலை ஆரம்பித்துள்ளதையும் காண முடிகிறது. இந்தியாவை அதீதமாக கையாள முடியுமென கணக்கிட்ட தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு அதிக நெருக்கடியை சீனா தந்துள்ளதாகவே தெரிகிறது.

சீனாவின் இறுக்கமான போக்கும் அதன் அணுகுமுறைகளும் இலங்கை இந்திய உறவை பாதிப்பதாகவே தெரிகிறது. இக்கட்டுரையும் இலங்கை இந்திய உறவில் சீனாவின் நடவடிக்கைகள் பற்றிய தேடலாகவே அமைய வுள்ளது.

முதலாவது இலங்கைக்கான சீனத் தூதுவர் ஷிவென்ஹொங் ஊடகங்களுக்கு எழுதிய கட்டுரையில் தெரிவித்த விடயத்தை நோக்குவது அவசியமானது. அதாவது சில நாடுகள் அருகில் அல்லது தொலைவில் இருக்கலாம். பல்வேறு அடிப்படையற்ற காரணங்களை முன் வைத்து இலங்கையின் இறையாண்மை மற்றும் சுதந்திரத்தை மிதித்து, அசௌகரியங்களுக்குள்ளாக்கி வருகின்றன. இலங்கையின் இறையாண்மை சுயாதீனம் மற்றும் ஒருமைப்பாட்டை மீறப்படுவதை சீனா எந்த சந்தர்ப்பத்திலும் சகித்துக் கொள்ளாது. சீனா இலங்கைக்கு ஒத்துழைப்பை வழங்கும் என்றார்.

இதற்கு பதிலளித்த இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, சீனத் தூதுவரின் கருத்துகளை நாங்கள் கவனித்துள்ளோம். அவரது அடிப்படை இராஜதந்திர நெறிமுறைகளை மீறுவது தனிப்பட்ட பண்பாக இருக்கலாம் அல்லது ஒரு பெரிய தேசம் என்ற மனப்பான்மையாக இருக்கலாம் என்றார். அவர் மேலும் தெரிவிக்கும் போது இலங்கைக்கு இப்போது தேவை ஆதரவு தான். மற்றொரு நாட்டின் நிகழ்ச்சி நிரலுக்கு சேவை செய்யும் தேவையற்ற சர்ச்சைகள் அல்ல எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாவது, சீனாவின் யுவாங் விங்-05 உளவுக் கப்பல் இலங்கைக்கு வருகை தந்ததனால் இலங்கை இந்திய உறவில் தாக்கத்தை ஏற்படுத்தியதென இலங்கைக்கான இந்தியத் தூதுவர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார். எதிர்காலத்தில் இரு நாடுகளுக்கு மிடையிலான இவ்வாறான நம்பிக்கையீனங்கள் தவிர்க்கப்பட வேண்டுமென அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டையில் சீன உளவுக் கப்பலை அனுமதித்த கொழும்பின் முடிவு புதுடில்லிக்கு ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது. எதிர்காலத்தில் இலங்கையும் இந்தியாவும் கடல் சார் பாதுகாப்பு நெருக்கடியை எவ்வாறு கையாள்தல் என்பது பற்றி ஆராய்ந்து முடிவுகளை எடுக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளார். இதன் அடுத்த கட்டமாகவே இந்தியாவுக்கும் திருகோணமலை துறைமுகத்துக்கும் இடையே எரிசக்திக் குழாய் அமைக்கும் திட்டமொன்றை மிலிந்த மொரகொட வெளிப்படுத்தியுள்ளார். இலங்கை மண்ணையோ அல்லது கடல் பிராந்தியத்தையோ இந்தியாவின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்காக பயன்படுத்தப்படுவதை இலங்கை அனு மதிக்காது என்றும் 1983 ஆம் ஆண்டு முதல் ந்தியாவுக்கு இலங்கை இந்த உறுதி மொழியை அளித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். கடந்த 9 மாதங்களாக ஒவ்வொரு நெருக்கடியிலும் இலங்கைக்கு இந்தியா ஆதரவளித்துள்ளது. இந்தியா இல்லை என்றால் இலங்கை கடுமையான பிரச்சினைகளை எதிர் நோக்கி இருக்கும். இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து 380 கோடி டொலர் மதிப்பிலான உதவிகளை இந்தியா இலங்கைக்கு வழங்கி உள்ளது. எனினும் இலங்கைக்கு கடினமான காலம் முடிவடையவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

மூன்றாவது, இதேநேரம் இந்தியாவின் முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பங்கஜ் சரண் என்பவர் சீனா ஒரு பெரும் விளையாட்டுக்குரிய துருப்புச் சீட்டாக இலங்கையைப் பயன்படுத்துகிறது. கடந்த வருடங்களில் சீனாவினால் பின்பற்றுப்பட்டு வந்த கொள்கைகளே இலங்கையின் முக்கிய பொருளாதார நெருக்கடிக்கு காரணமாகும்.



இத்தகைய சூழ்நிலையில் இலங்கை மீது கரிசனை கொண்டது போலும் இலங்கையின் பாதுகாப்பில் அக்கறையுடையது போலும் சீனா செயற்படுகின்றது. இவ்வாறான சூழ்நிலையில் நீண்ட காலமாக இலங்கையுடன்இ ந்தியா நல்லுறவை பேணி வருகிறது. இது எதிர்காலத்தில் தொடரும் என்பதை இந்தியா அயல் நாடுகளை கையாள்வதில் சீனா போன்று அல்லாது வேறு முறையான அணுகு முறைகளைக் கொண்டுள்ளோம் என சரண் தெரிவித்துள்ளார்.

நான்காவது, இதேநேரம் சீனாவின் உளவுக் கப்பலான யுவாங்வாங்-05 இலங்கையின் தென்கிழக்குப் பகுதியான இந்து சமுத்திரத்தில் 400 மைல் தூரத்தில் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அப்பகுதியிலிருந்து கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் இந்துஸ்தான் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. இந்திய உளவுத் தகவலை ஆதாரமாகக் கொண்டு இத்தகவலை வெளியிட்ட இந்துஸ்தான் பத்திரிகை, சீனக் கப்பலின் நடவடிக்கை இந்தியாவுக்கு தொடர்ச்சியாக நெருக்கடியாக உள்ளது என்றும் து வோர் அபாயமான ந்து சமுத்திர பயணம் என்றும் தெரிவித்துள்ளது. 2020களுக்குப் பின்னர் 51க்கும் மேற்பட்ட வேறுபட்ட நாடுகளின் கப்பல்கள் இந்து சமுத்திரத்தின் ஆய்வுகளை மேற் கொண்டுள்ளதாவும் இதில் இந்தியாவும் அதன் நட்பு நாடுகளும் 3-5 இற்கு இடைப்பட்ட கப்பல்களே ஆய்வுக்குட்படுத்தப் பட்டுள்ளமை தெரிய வருகின்றது.

அது மட்டுமன்றி இந்து சமுத்திரத்தில் உள்ள சிறிய நாடுகளையும் அவற்றின் பொருளாதார வலயங்களையும் (200 கடல் மைல்) அதன் வளங்களையும் இலக்கு வைத்தது என்றும் ந்தியாவின் வங்காள விரிகுடாவை நோக்கிய ஏவு கணை நடவடிக்கைகளையும் கையாளும் உத்திகளோடு சீனா நகர்வதாக தெரிய வருகிறது.

ஐந்தாவது, இந்திய-சீன இராஜதந்திர நெருக்கடியின் மத்தியில் சீனத் தூதுவருடைய யாழ்ப்பாண வருகை அதிக முக்கியத்துவம் பெற்றதாக மாறியுள்ளது. அவரது வருகை வடக்கு-கிழக்கில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களை மையப்படுத்தியதோடு, இந்தியாவுடனான இலங்கையின் இராஜதந்திர நெருக்கடி மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது.

குறிப்பாக அவரது வருகை பல்வேறு பட்ட நலத் திட்டங்களை முன் வைப்பதாகவும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டங்களும் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. அத்துடன் யாழ்ப்பாண பல்கலைக் கழக விவசாய பீடத்துடன் உடன் படிக்கையொன்று மேற் கொள்ளவும் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் ஜெனீவா அரங்கு பொறுத்து சீனத் தூதுவரின் உரையாடலின் அதிருப்தியினால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் சீனத் தூதுவருக்கு எதிரான அறிக்கையை வெளியிட்டதோடு, ஊடகப் பரப்பில் சீனத் தூதுவருக்கு எதிரான பிரசாரங்கள் முதன்மைப்படுத்தப்பட்டது. இதனால் வடக்கு-கிழக்குக்கான விஜயத்தை ஒத்தி வைத்துள்ள சீனத் தூதுவர் அதிக இராஜதந்திர ரீதியிலான முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளார்.

இவ்வாறு, சீனா-இலங்கை-இந்திய தளத்தில் இராஜதந்திர செய்முறையில் ஏற்பட்டுள்ள முறுகல் இலங்கை தொடர்பில் ஏற்படவுள்ள நெருக்கடிகளையும் இந்திய-சீன மோதலின் விளைவுகளையும் அவதானிப்பது அவசியமாகும். சீனா இலங்கை மீதான பிடியை மேலும் பலப்படுத்த திட்டமிடுகின்றது. அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருட குத்தகைக்கு பெற்றுக் கொண்டமை இலங்கை மீதான இருப்பு மட்டுமன்றி இந்து சமுத்திரம் மீதான செல்வாக்கையும் இந்தியாவுக்கு எதிரான நகர்வுகளையும் சாத்தியப்படுத்த வழிவ குத்துள்ளது. இதனை நீடிப்பது மட்டுமன்றி இலங்கைக்கு ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியை பயன்படுத்திக் கொண்டு மேலும் இலங்கையின் இதர துறைமுகங்களையும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலங்களையும் கைகப்படுத்த திட்டமிடுகிறது. அது மட்டுமன்றி வடக்கு-கிழக்கு நோக்கிய சீனாவின் பிரவேசம் என்பது வடக்கு கிழக்கில் உள்ள துறைமுகங்களை விருத்தி செய்கின்ற நோக்கோடு தனது செல்வாக்கை கட்டியெழுப்பவும் அதன் மூலம் இந்தியாவுக்கொரு நெருக்கடியை உருவாக்கவும் முனைகிறது.

இந்தியாவை இலங்கைத்தீவிலிருந்து விலகி இருக்க வைக்கும் செய் முறைகளை முன்னகர்த்த திட்டமிடும் சீனா, வடக்கு கிழக்கிலிருந்து இந்தியாவை கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் முடியுமென கருதுகின்றது. அவ்வாறு நகர்த்தப்படுகின்ற போது வங்காள விரிகுடா இலங்கைக்கும் இந்தியாவுக்குமான பிரதான நீர்நிலை மையம் சீன செல்வாக்கிற்குள் உட்படுத்தவும் வடக்கு-கிழக்குக்கும் தமிழகத்துக்குமான உறவை அதன் வழி துண்டிக்கவும் சீனா முயல்கிறது. கடந்த வருடம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த போது தமிழ் மீனவர்களுக்கு பாரிய பொருளாதார உதவிகளை வழங்கி இருந்தமையும் இந்திய மீனவர்கள் தொடர்பான தமிழ் மீனவர்களின் குற்றச்சாட்டுகளை கேட்டறிந்தமையும் பாம்பன் பாளத்தை அண்டிய பிரதேசத்தில் இலங்கைக்குச் சொந்தமான மணதிட்டுகளை பார்வையிட்டமையும் காங்கேசன்துறை பருத்தித்துறை துறைமுகங்களை பார்வையிட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு இந்திய-இலங்கை உறவில் சீனாவின் எல்லையற்ற தலையீடுகள் அதிகரிப்பதோடு, இலங்கையின் இறைமை சார்ந்தும் தேசிய ஒருமைப்பாடு சார்ந்தும் இலங்கையை விட சீனா அதிக கரிசனை கொள்கிறது. காரணம் இந்தியாவின் எல்லையற்ற தலையீடுகளினால் சீனா இலங்கைத் தீவில் கட்டமைத்த நலன்கள் சிதைந்து போய் விடுமென சீனா அச்சமடைகிறது. புவிசார் அரசியல் ரீதியிலும் இன,மத, மொழி, பண்பாட்டு அடிப்படையிலும் இந்திய-இலங்கை உறவு வலுவானதாகவே காணப்பட்டது. ஆனால் நலன் சார்ந்தே இலங்கை ஆட்சியாளர்கள் இந்தியாவுக்கு எதிரான கொள்கையைக் கொண்ட நாடுகளோடு நெருக்கமான உறவை ஏற்படுத்துவதன் மூலம் இந்தியாவை கையாண்டு வந்தனர். தென்னிலங்கை ஆட்சியாளர்கள் மட்டுமல்ல பௌத்த மத பீடங்களும் புத்திஜீவிகளும் இராணுவமும் இந்தியாவுக்கு எதிரான மன நிலையோடு செயற்படுகின்ற போக்கினை கடந்த வரலாறு முழுவதும் கண்டு கொள்ளக் கூடியதாக அமைந்துள்ளது.

தற்போது கூட இலங்கைக்கான இந்தியத் தூதுவர் மிலிந்த மொரகொட இலங்கையின் பொருளாதார நெருக்கடி முற்றுப் பெறவில்லை என்பதற்காகவே இந்தியாவோடு புரிந்துணர்வான உறவை கட்டமைக்க வேண்டுமென உரையாடியுள்ளார். புது டில்லியை மையப்படுத்தி தனது செய்தியை வெளிப்படுத்துகின்ற போது சென்னைக்கு இரு தடவை முதலமைச்சரை சந்திக்க வருகை தந்த போதும் திருகோணமலை இந்திய எரிவாயுக் குழாய் திட்டத்தை வகுக்கும் போதும் நெருக்கடியிலிருந்து விடுபடுவதற்கான ஒத்துழைப்பையே விரும்புவதாகத் தெரிகிறது.

இலங்கையின் வெளியுறவில் இந்தியாவே முதலிடமெனக் குறிப்பிட்ட முன்னாள் வெளிவிவகார செயலாளர் ஜயநாத் கொலம்பகே, சீனக் கப்பலை வரவேற்பதில் முதன்மையானவராக காணப்பட்டார். சீனாவுடனான உறவை அதிகம் முதன்மைப்படுத்தும் வெளிவிவகார செயலாளராக அவர் விளங்கியிருந்தார்.

எனவே, இலங்கை -இந்திய உறவு சீனாவினால் நெருக்கடிமிக்க சூழலை எதிர் கொள்வதற்கான வாய்ப்பே அதிகமாக உள்ளது. சீனா இலங்கைத் தீவை சூடான் போன்று இலகுவில்

(20ம் பக்கம் பார்க்க)

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
-K.T.கணேசலிங்கம்-



# இந்திய ஒற்றுமைப் பயணம் காங்கிரசுக்கு பலனளிக்குமா?

கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
- குடந்தையான் -

இந்தியாவின் ஆளுங்கட்சியாக திகழும் பாரதிய ஜனதா கட்சி தொடர்ச்சியாக தேர்தல் அரசியலுக்கென ஒரு முகம், ஆட்சி, நிர்வாகத்திற்கென இன்னொரு முகம், ஏனைய கட்சிகள் ஆளும் மாநிலத்திற்கென மறுமுகமென பல்வேறு முகங்களுடன் செயற்படுகிறது



காங்கிரஸ் இல்லாத இந்தியா எனும் கோஷத்துடன் தன் அரசியல் பயணத்தில் ஆதிக்கத்துடன் செல்லும் பா.ஜ.க.விற்கு எதிராக, 'இந்திய ஒற்றுமை பயணம்' எனும் புதிய கோஷத்துடன் காங்கிரஸ் கட்சி நடை பயணம் ஒன்றை கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை முன்னெடுக்கிறது.

இந்த நடைபயணம் அந்தக் கட்சியின் முன்னாள் தலைவரும், தற்போதைய மக்களவை உறுப்பினருமான ராகுல் காந்தி தலைமையில் நடைபெறுகிறது. செப்டம்பர் 7ஆம் திகதியன்று கன்னியாகுமரியில் தொடங்கும் இந்த நடைபயணம் 150நாட்களில், 12 மாநிலங்களை கடந்து, மொத்தம் 3500 கிலோமீற்றர் தொலைவிற்கு பயணிக்கவிருக்கிறார்கள்.

மக்களை சந்தித்து, விலைவாசி உயர்வு வேலையில்லா திண்ட்டாட்டம் உள்ளிட்ட பல விடயங்களை முன்னிறுத்தி, பா.ஜ.கவிற்கு எதிராக மேற்கொள்ளும் 'இந்திய ஒற்றுமை பயணம்', என்ற நடைபவணி காங்கிரஸ் கட்சிக்கு எதிர்பார்த்த அளவிற்கு பலனை தருமா? தராதா? என்பது தான் தற்போதைய பேசு பொருளாகியுள்ளது.

காங்கிரஸ் கட்சியின் 'இந்திய ஒற்றுமை பயணம்' தமிழகத்திலிருந்து தொடங்குவதால், அதன் பிரதான கூட்டணி கட்சியான தி.மு.கவின் ஒத்துழைப்பு முழுமையாக கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது தொடர்பாக காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்கள் சிலர், தி.மு.க. தலைமையிடனும், தலைமை கழக நிர்வாகிகளுடன் சுமூகமான பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாக தகவல்கள் வெளியாகி இருக்கிறது.

இருப்பினும் ராகுல் காந்தி தலைமையில் காங்கிரஸ் கட்சியினர் மேற்கொள்ளவிற்கும் 'இந்திய ஒற்றுமை பயணத்திற்கு' தி.மு.க. எம்மாதிரியான ஆதரவை வழங்கவிருக்கிறது என்பதனை, தமிழக பா.ஜ.கவும், ஏனைய அரசியல் கட்சிகளும் கண்கொத்தி பாம்பாக கண்காணித்துக் கொண்டிருக்கிறது.

ஆனால் யாரும் எதிர்பாராத வகையில் ராகுல் காந்தியின் 'இந்திய ஒற்றுமை பயணத்திற்கு' எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அ.தி.மு.க.வினர் மறைமுகமாக ஆதரவளிக்க கூடும் தகவல்கள் வெளியாகி இருப்பது அனைவரையும் ஆச்சரியப்படுத்தி இருக்கிறது.

காங்கிரஸ் கட்சி தமிழகத்தில் மேற்கொள்ளும் 'இந்திய ஒற்றுமை பயணம்' தமிழக அளவில் அக்கட்சிக்கு ஊக்கம் அளித்தாலும் தொடர்ந்து வேறு மாநிலங்களில் பயணிக்கும் போது பல அசம்பாவிதங்களை எதிர்கொள்ள கூடுமென அக்கட்சியினர் கருதுகிறார்கள். இந்நிலையில் இந்த ஒற்றுமை பயணத்தை சீர்குலைக்கும் வகையில் அக்கட்சியிலிருந்து விலகிய மூத்த தலைவரான குலாம் நபி ஆசாத், 'ராகுல் காந்தி தகுதியற்ற தலைவர்' என்று எதிர்மறையான பிரசாரத்தினை தொடர்ந்து வருகின்றார். இதன் மூலம் ராகுல்காந்தியை தொடர்ந்து அக்கட்சியைச் சேர்ந்த மூத்த தலைவர்கள் மூலம் எதிர்ப்பு தெரிவிப்பதை பா.ஜ.க. ஒரு உளவியல் உத்தியாக தொடர்ந்து கொண்டு வருகிறது.

மேலும் இந்த இந்திய ஒற்றுமை பயணம், சட்டசபை தேர்தல் நடக்கவிருக்கும் குஜராத்தில் காங்கிரஸிற்கு ஆதரவாக மாற்றம் பெற்றுவிடக்கூடாது என்பதில் ஆளும் பா.ஜ.க. திட்டமிட்டு பல தடைகளை உருவாக்க காய் நகர்த்தி வருகிறது.

இந்நிலையில் குலாம் நபி ஆசாத்தின் விலகல் குறித்தும், அவர் புதிய கட்சி தொடங்குவது குறித்து கருத்து வெளியிட்ட காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்கள், குலாம் நபி ஆசாத் தவறான முடிவை மேற்கொண்டிருக்கிறார். கடந்த முறை பஞ்சாப் சட்ட பேரவை தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் முதல்வராக இருந்த அமிர்தர் சிங்கிடம் மறைமுகமாக பேச்சு வார்த்தை நடத்தி, அவரை அக்கட்சியிலிருந்து விலக்கி தனிக்கட்சி தொடங்க வைத்து, தற்போது அரசியல் அடையாளம் இல்லா தாக்கியுள்ளது. அதேபோன்ற முடிவு தான் குலாம் நபி ஆசாத்திற்கும் ஏற்படும் என்று குறிப்பிடுகின்றனர்.

இந்நிலையில், தேசிய அளவில் சிறந்த அரசியல்வாதிகளாக அறியப்படும் நிதிஷ் குமார், சந்திரசேகர ராவ், மம்தா பானர்ஜி, ஸ்டாலின், பினரயி விஜயன் போன்றவர்கள் வலிமை மிக்க கூட்டணியை பாராளுமன்ற தேர்தலுக்கு முன்பாகவோ அல்லது தேர்தலுக்கு பின்பாகவோ ஒருங்கிணைக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பும் ஏற்பட்டிருக்கிறது.

மக்கள் செல்வாக்கு மிகுந்த எதிர்கட்சித் தலைவர்கள் ஒருமித்த குரலில் பா.ஜ.கவுக்கு எதிராக குரலெழுப்பக்கூடும். அதற்கு ராகுல் காந்தியின் 'இந்திய ஒற்றுமை பயணம்' ஒரு தூண்டுகோலாக திகழும் என்று நம்பிக்கை வைக்கப்பட்டுள்ளது.

அதே தருணத்தில் காங்கிரஸ், பா.ஜ.கவை விரும்பாத ஏனைய அரசியல் கட்சிகளின் தலைவர்கள், ராகுல் காந்தியின் இந்திய ஒற்றுமை குறிப்பிடுகையில், இந்தப் பயணம் மக்களுக்கானதல்ல. ராகுல் காந்தி காங்கிரஸ் கட்சியின் தலைவராக தெரிவுச் செய்யப்பட வேண்டும் என்பதற்காக மேற்கொள்ளப்படும் கட்சி அரசியல் உத்தியென்று'' விமர்சனம் செய்துள்ளனர். அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவு, மாநிலங்களவை உறுப்பினர்களின் ஆதரவு, பொதுக்குழு உறுப்பினர்களின் ஆதரவு, மாவட்ட செயலாளர்களின் ஆதரவு என்று பெரும்பான்மையான கட்சி பிரதிநிதிகளின் ஆதரவு எடப்பாடி பழனிச்சாமிக்கு இருந்தாலும், பன்னீர் செல்வத்திற்கு மத்தியில் ஆளும் பா.ஜ.க. நேரடியாகவும், மாநிலத்தில் ஆளும் தி.மு.க. மறைமுகமாகவும் ஆதரவு தெரிவிப்பதால், தற்போதைய சூ ழலில் எடப்பாடி பழனிச்சாமி மௌனமாக இருப்பதை விட வேறெந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ள இயலாத நிலை தொடர்கிறது.

இதனை தனக்கு சாதகமாக பயன்படுத்தும் பன்னீர்செல்வம், ஆளும் தி.மு.க. தலைமை மீதான தன்னுடைய நட்பினை பயன்படுத்தி, எடப்பாடி பழனிச்சாமி முதல்வராக இருந்தபோது நடைபெற்ற தூத்துக்குடி துப்பாக்கி சூட்டுச் சம்பவம் தொடர்பாக நீதியரசர் அருணா ஜெகதீசன் அளித்த அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

மேலும் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மரணம் தொடர்பாக ஆறுமுகசாமி ஆணையம் அளித்துள்ள அறிக்கையின் படி, தற்போது எடப்பாடி பழனிச்சாமியின் முகாமில் இருக்கும் முன்னாள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் விஜயபாஸ்கர், சசிகலா, மருத்துவர் சிவக்குமார் ஆகியோர் மீது விசாரணை நடத்த தமிழக அமைச்சரவை முடிவு செய்திருப்பதும் பன்னீர்செல்வத்திற்கு ஆதரவாகத்தான் இருக்கும் என்றும் அவரது ஆதரவாளர்கள் உறுதியாக தெரிவிக்கிறார்கள்.

அதேநேரம், நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசை மையப்படுத்தி மாநில நிதித்துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் ராஜன், வட இந்திய ஊடகத்திற்கு வழங்கிய நேர்காணல் வட இந்திய அரசியல்வாதிகளிடமும், வட இந்திய அரசியல் கொள்கை வகுப்பாளர்களிடமும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாக அங்கிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கிறது. அதனால் அமலாக்கத்துறை, வருமானவரித் துறை போன்ற மத்திய அரசின் துறைகள், பி.டி.ஆர்.பழனிவேல் ராஜனை குறிவைத்து இயங்க தொடங்கியிருக்கிறது.

மாநில கட்சிகளின் வளர்ச்சியை ஓரளவு அங்கீகரித்த காங்கிரஸ் கட்சி, மீண்டும் தேசிய அளவில் எழுச்சி பெற்று வலிமையான எதிர்க்கட்சியாக திகழ அக்கட்சியின் தலைவர்களில் ஒருவரான ராகுல் காந்தி தலைமையில் மேற்கொள்ளவிருக்கும் 'இந்திய ஒற்றுமை பயணம்' பலனை அளிக்கும் என்று ஜனநாயகத்தின் மீதும், மத சார்பற்ற கொள்கைகள் மீதும் தீவிரமான ஈடுபாடு கொண்டவர்கள் உறுதியாக தெரிவிக்கிறார்கள். இது காங்கிரஸ் கட்சிக்கு புத்துயிர் அளிக்குமா என்பது தான் இப்போதைய கேள்வி.

## கடன் வாங்கி கல்யாணம் செய்யும் காலமல்ல!

(17ம் பக்த் தொடர்ச்சி) இந்த நெருக்கடியின் போது தான் ஏனைய பிரச்சினைகளுக்கான மருத்துவத்தையும் செய்யக் கூடியதாக இருக்கும். இளைய தலைமுறையினரை அவர் அரவணைத்துக் கொள்வது அவசியம். அவர்களுக்கான அங்கீகாரத்தையும் இடத்தையும் அவர் சரியாக வழங்கினால் மாற்றங்களை இலகுவாக எட்ட முடியும்.

இப்பொழுது பாராளுமன்றத்தைப் பார்த்தீர்கள் என்றால் புரியும். அத்தனை தலைகளும் கிழடு தட்டியவை. ஊழல், இனவாதம், பொறுப்பின்மை போன்றவற்றின் திரண்ட வடிவமாக இருப்பவை. ஆனால், இதைப் பற்றிப் பொருட்படுத்தாமல், 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு அரசுப் பணிகளில் இருந்து ஓய்வு என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. அந்த அறிவிப்புச் சரியானதே. அதே அறிவிப்பு நம்முடைய அரசியல் தலைமைகளுக்கும் பொருந்தக் கூடியதாக இருந்தால் சிறப்பு. கழிவுகளைக் கையில் வைத்துக் கொண்டு, உருப்படியாக எந்தப் புதிய நன்மைகளையும் செய்ய முடியாது.

தேசிய நெருக்கடிக்கு தேசிய இடர் நீக்க வேலைத்திட்டம் அவசியம். அதையே நாடும் நாமும் வேண்டி நிற்கிறோம். எல்லோரும் திடமாக எண்ணிக் கொண்டால், ஐந்து ஆண்டுகளில் இலங்கையை மிகப் பெரிய பொருளாதார வளமுடைய நாடாக வளர்த்தெடுத்து விட முடியும். அதை நோக்கிப் பயணிப்பதைப் பற்றிச் சிந்திப்போம்.

## சீனாவால் கட்டமைக்கப்படும்

(19ம் பக்கத் தொடர்ச்சி) கைவிட்டு விடாது. அவ்வாறே இந்து சமுத்திரத்தின் மத்தியில் உள்ள இலங்கைத்தீவை இந்தியாவிடமிருந்து பிரிப்பதுவும் கையாளுவதிலும் அதிக கரிசனையுள்ள செயற் பாட்டை சீனா எதிர்காலத்தில் முன்னெடுக்க வாய்ப்புகள் உண்டு. இந்தியாவின் கொள்கை வகுப்பாளர்களின் பலவீனமும் இராணுவ ரீதியிலான மெருதுவான வளர்ச்சியும் சீனாவை எதிர்கொள்வதில் அதிக சவால்களை ஏற்படுத்தக்கூடியது. இந்தியாவும் ரஷ்யாவும் சீனாவும் ஒரே களத்தில் பயணிக்க முயலும் போது இலங்கைத்தீவை அனைத்து சக்திகளும் கையா ள்வதற்கான வாய்ப்பும் எதிர்காலத்தில் ஏற்படக் கூடியதாக அமையும்.

# தமிழ் பகுதிகளில் சீனாவின் ஆர்வம்?

இலங்கையில் சீனாவின் பிரசன்னம் அதிகம் பேசப்படும் ஒன்று. சர்வதேச அளவில் இலங்கையின் நெருக்கடிகள் சீன இலங்கை உறவின் வழியாகவே நோக்கப்படுகின்றது. இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கான பிரதான காரணமாகவும் சீனாவே நோக்கப்படுகின்றது.

அண்மையில் அமெரிக்க வெளியக உளவுத்துறையான சி.ஐ.ஏ.யின் தலைவர் கூட, ஒரு கலந்துரையாடலின் போது, சீனாவுடன் தூரநோக்கின்றி பொருளாதார தொடர்புகளை பேணிக் கொள்ளும் நாடுகள் இலங்கையிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டுமென்று கூறியிருந்தார்.

இலங்கை தூரநோக்கின்றி சீனாவின் திட்டங்களை அனுமதித்ததன் விளைவாகவே, இன்று பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். சி.ஐ.ஏயின் தலைவர் இவ்வாறு கூறுவதிலிருந்து எந்தளவிற்கு, சீன விவகாரம் மேற்குலகால் நோக்கப்படுகின்றது என்பதை புரிந்து கொள்ள முடியும். சீனாவிற்கும் இலங்கைக்குமான இரு தரப்பு உறவு 1957களிலிருந்து நீடிக்கின்றது. ஆனாலும் நாடுகளுக்கிடையிலான சாதாரண உறவாகவே அது இருந்தது. ஆனால்



விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தின் போது தான், சீன-, இலங்கை உறவில் சடுதியான மாற்றங்கள் ஏற்பட்டன. இந்தியாவும் அமெரிக்காவும் இறுதி யுத்தத்தின் போது, ஆயுத தளபாட உதவிகளைச் செய்வதற்கு மறுத்திருந்த நிலையில் தான், சீனா அந்த இடத்தை கச்சிதமாக பயன்படுத்திக் கொண்டது. .

இந்தப் பின்னணியில் நோக்கினால், மகிந்த ராஜபக்ஷ காலம் தான் சீனாவிற்கும் இலங்கைக்குமான தேநிலவுக் காலமாக இருந்தது. 1973.லிருந்து இலங்கைக்கு கடனுதவி வழங்கும் நாடுகளில் முதன்மையான இடத்தை ஜப்பானே பெற்றிருந்தது. மகிந்த காலத்தில் ஜப்பானின் இடத்தை சீனா எடுத்துக் கொண்டது.

இலங்கையில் சீனாவின் பிரசன்னம் முதல் பார்வையில் இந்தியாவிற்கே சிக்கலானது. ஏனெனில் இலங்கை ஒரு உடனடி அயல்நாடு. இந்தியாவின் உடனடி அயல் நாடொன்றிற்குள், சீனாவின் செல்வாக்கு அதிகரிப்பது நீண்டகால நோக்கில் இந்தியாவிற்கு சிக்கலானதாகும்.

அடுத்தது அமெரிக்காவின் நோக்கிலும் சீனாவின் பிரசன்னம் சிக்கலானது. ஆனால் அமெரிக்காவின் அவதானம் உலகளாவியது. சீனாவின் செல்வாக்கு இந்து சமுத்திர பிராந்தியத்தில் அதிகரித்துச் செல்லுதல் என்னும் நோக்கில் தான் இந்த விடயத்தை அமெரிக்கா நோக்கும். இந்த பின்னணியில ' தான், இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அமெரிக்க ராஜாங்கச் செயலர் மைக்பொம்பியோ, .இலங்கையின் இறைமையை சீனா, கடலிலும் நிலத்திலும் மோசமாக மீறி வருவதாக குற்றம் சாட்டியிருந்தார்.

சீனாவின் பிரசன்னம் சிக்கலானது என்னுமடிப்படையில் தான் இவ்வாறானதொரு கடுமையான அறிக்கையை பொம்பியோ வெளியிட்டிருந்தார். பொம்பியோவின் கூற்றுகள், சீனாவின் பிடிக்குள் அகப்பட்டிருக்கும் ஒரு நாடாக இலங்கையை நோக்குவதற்கான பார்வையை முன்வைத்தது.

இன்று இலங்கை தொடர்பில் வெளிவரும் உலகளாவிய அவதானம் இந்த பின்புலத்தில் தான் முன்வைக்கப்படுகின்றது.

ஆனால் சீனா இவ்வாறான கடுமையான குற்றச்சாட்டுகளால் பின் வாங்கும் நிலையிலில்லை. கிடைத்த சந்தர்ப்பத்தை கச்சிதமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்னும் நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்றது. தெற்கில் வலுவாக காலூன்றியிருக்கும் சீனா, தற்போது தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் வடக்கு, கிழக்கு பகுதிகளிலும் காலூன்றுவதற்கான வாய்ப்புகளை தேடுவது போல் தெரிகின்றது.

சீனத் தூதுவர், வடக்கு, கிழக்கிற்கு விஜயங்களை மேற்கொள்வதில் அதிக ஆர்வத்தை காண்பிக்கின்றார். இவ்வாறானதொரு ஆர்வத்தை முன்னர் சீனா ஒரு போதும் வெளிப்படுத்தியதில்லை. வடக்கிற்கு விஜயத்தை மேற்கொண்டு தமிழ் மக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தும் நோக்கில் கலந்துரையாடல்களில் தூதுவர் ஈடுபடுகின்றார். அதேபோன்று தான் கிழக்கிலும், சமூக நலத் திட்டங்களுக்கு நிதியளிப்பதில் ஆர்வம் காண்பிக்கின்றார்.

இதன் மூலம் முழு இலங்கையிலும் தங்களின் பிரசன்னத்தை வைத்திருக்க வேண்டுமென்று சீனா விரும்புவது போல் தெரிகின்றது. கிழக்கிலங்கையில் மட்டக் களப்பில் நலிவுற்றவர்களுக்கு வீடுகளை அமைப்பதற்கான சிறியளவிலான உதவிகளை செய்ய முன வந்திருக்கின்றது.

அதே போன்று விவசாயத் திட்டமொன்றையும் பரிசீலிக்கவுள்ளது. சீனாவிற்கும் தமிழர்களுக்கும் வரலாற்று ரீதியான தொடர்புகளுண்டு. இந்தத் தொடர்புகளை ஆராயும் முயற்சியிலும் சீனா முன்னர் ஈடுபட்டிருந்தது. இந்த நிலையில் தான் அண்மைக்காலமாக தமிழ் பகுதிகளுடனான தொடர்புகளை அதிகரிக்க முயற்சிக்கின்றது. இதுவும் இந்தியாவிற்கு சிக்கலான ஒன்று தான்.

ஏனெனில் பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள், எவர் ஆதரவாரித்தாலும், அதனை பெற்றுக் கொள்ளும் நிலையிலேயே இருக்கின்றனர். இந்த நிலைமையானது மறுபுறமாக தமிழர்களுடனான சீனாவின் கடாட்சங்களை அதிகரிப்பதற்கு மிகவும் சாதகமானது. குறிப்பாக கிழக்கிலங்கையிலுள்ள மாவட்டங்களில் வாழும் வறுமை நிலையிலுள்ள தமிழ் மக்கள் பல்வேறு பொருளாதார நெருக்கடிளை எதிர் கொண்டு வருகின்றனர்.

கிழக்கிலங்கை தமிழ் மக்கள் பல்வேறு வழிகளிலும் பின்தங்கியிருப்பு தாகவும் தனிமைப் படுத்தப்பட்டிருப்பதான பார்வையொன்றும் கிழக்கிலங்கையின் படித்த தமிழர்கள் மத்தியிலுண்டு. இந்த பின்புலத்தில் தான் சீனத் தூதரகத்தை நாடும் போக்கு உருவாகியது.

வடக்கு,கிழக்கில் வாழும் பின்தங்கிய மக்கள் தொடர்பில் சீனத் தூதரகம் பிரத்தியேக மதிப்பீடுகளையும் செய்திருக்கலாம். வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள், வரலாற்று ரீதியாக ந்தியாவுடன் மட்டுமே உணர்வு ரீதியாக பிணைந்திருக்கின்றனர். இதற்கு தமிழ்நாடு ஒரு பிரதான காரணமாகும்.

இரண்டாவது காரணம் இந்து மதமாகும். வடக்கு, கிழக்கு இந்துத் தமிழர்களை பெரும்பான்மையாகக் கொண்டிருக்கும் ஒரு தமிழ் பகுதி. இவ்வாறானதொரு சூழலில் தான் பொருளாதாரத் தேவைகளை ஒரு விடயமாகக் கொண்டு, சீனா அதன் நகர்வுகளை மேற் கொள்கின்றது. நிலைமை சீனாவிற்கு சாதகமாகவே இருக்கின்றது. சீனா கொஞ்சம் கொஞ்சமாக முன்னெடுக்கும் திட்டங்கள் காலப் போக்கில், தமிழ் பகுதிகளில் சீன ஆதரவுப் பிரிவுகளை ஏற்படுத்தினால் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. கிழக்கு மாகாணத்தை பொறுத்த வரை முஸ்லிம்கள் ஒரு அரசியல் பிரிவாக வளர்ச்சியுற்றிருக்கின்றனர். முஸ்லிம்கள் இந்தியாவிற்கு நெருக்கமானதொரு மக்கள் பிரிவாக ஒருபோதும் இருக்கப் போவதில்லை. இந்த பின்புலத்தில் கிழக்கு மாகாணத்தில் இந்தியாவிற்கு நெருக்கமான மக்கள் கூட்டமென்றால், அது இந்து தமிழ் மக்கள் மட்டும் தான். அந்த மக்கள் மத்தியிலும் சீனாவின் செல்வாக்கு அதிகரித்தால் அது இந்தியாவிற்கு நல்லதல்ல. இந்தியா பல்வேறு உதவிகளை செய்திருக்கின்றது.


ஆனால் சமூகத்தோடு ஊடாடக்கூடிய திட்டங்களில் இந்தியத் தூதரகம் அதிகம் நாட்டம் கொள்வதில்லை. இனியும் அப்படி இருக்க முடியுமா? சர்வதேச அரசு சாரா நிறுவனங்கள் உள்ளூர் நிறுவனங்களின் திட்டங்களுக்கு நிதியளித்தாலும் கூட, அவைகள் எந்தளவிற்கு சரியான முறையில் முன்னெடுக்கப்படுகின்றன என்பதில் கேள்விகளுண்டு. நிபுணத்தும் வாய்ந்த உள்ளூர் நிறுவனங்கள் மூலம் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றனவா என்பதிலும் சந்தேகங்கள் உண்டு.

சீனா ஒவ்வொரு அடியையும் அவசரப்படாமல் எடுத்து வைப்பதாகவே தெரிகின்றது. அதேவேளை சீனாவின் நகர்வுகள் நீண்டகால நோக்கம் கொண்டது. இந்தியாவின் ஆர்வங்களை நன்கு கணித்தே சீனா ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்கின்றது. வடக்கில் முன்னெடுக்கப்படும் திட்டங்களின் மீது இந்தியா செல்வாக்குச் செலுத்த முடியும். ஆனால் கிழக்கு அப்படியல்ல. ஏனெனில் கிழக்கிலங்கை தமிழ் மக்கள் தாங்கள் பல்வேறு விடயங்களில் பின்தங்கியிருப்பதாக கருதுகின்றனர். வடக்கிற்கு .இருப்பது போன்று புலம்பெயர் ஆதரவு கிழக்கிலங்கை தமிழர்களுக்கில்லை. இந்த இடைவெளி சீனாவிற்கு மிகவும் சாதகமானது.

சீனா என்ன நோக்கில் இலங்கையை பயன் ஸபடுத்த விளைகின்றது என்னும் கேள்விகளுடன் தான் அனைத்தும் தொடர்புபட்டிருக்கின்றது. தன்னை நோக்கி மேற்கொள்ளப்படும் மேற்குலக நகர்வுகளை எதிர் கொள்வதற்கான ஒரு தடுப்பரணாக இலங்கையை பயன்படுத்த முயற்சிக்கின்றதா? இந்தியாவுடன் எல்லைப் புறங்களிலுள்ள பிரச்சினைகளுக்கு பதிலலிப்பதற்கான ஒரு துருப்புச் சீட்டாக இந்தியாவின் உடனடி அயல் நாடொன்றை பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றதா?


இவைகள் ஊகங்கள் மட்டுமே. ஏனெனில் புவிசார் அரசியல் மோதல்கள் தொடர்பில் துல்லியமான கணிப்புகளை எவருமே செய்ய முடியாது. சில அவதானங்களை மட்டுமே முன்வைக்கலாம். புவிசார் அரசியல் போட்டிகளில் எதுவும் நடக்கலாம். ஆனால் சீனா அண்மைக்காலமாக, தமிழ் பகுதிகள் மீது ஆர்வம் காண்பித்து வருகின்றது என்பது மட்டும் உண்மை . உதவித் திட்டங்கள் மூலம், சீனா தமிழ் மக்களுடன் நெருங்க முயற்சிக்கின்றது. நெருங்கும் என்பதும் உண்மை .


கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -







# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?



மேடராசி அன்பர்களே1 எல்லா வற்றிலும் எதிர்பார்த்த நன்மை உண்டாகும். கொடுக்கல் வாங் கலில் இருந்த பிரச்னை தீரும். நீண்ட நாளாக இருந்த கஷ்டம் நீங்கும். அரசாங்கம் மூலம் லாபம் ஏற்படும். வெளி யூர் அல்லது வெளிநாட்டு பயணம் சாதக மாக இருக்கும். தொழில் வியாபாரம் லாப கரமாக நடக்கும். உத்யோகத்தில் மேலதி காரிகள் கொடுத்த வேலையை செய்து முடித்து அவர்களின் நன்மதிப்பை பெறு வீர்கள்.



ரிஷபராசி அன்பர்களே! தடை பட்டு வந்த காரியங்கள் சாதக மாக நடந்து முடியும். எதிர் பார்த்த உதவிகள் கிடைக்கும். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி கள் குறையும். உத்யோகத்தில் இருப்பவர் கள் நேர்மையாக சிறப்பாக பணிகளை செய்து மேலதிகாரிகளிடம் பாராட்டுக்கள் கிடைக்க பெறுவர். குடும்பத்தில் திரு மணம் போன்ற சுபகாரியங்கள் நடக்கும். உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.


மிதுனராசி அன்பர்களே! எதை யும் ஆராய்ந்து முடிவுகளை எடுப்பது நல்லது. வேகத்தை குறைத்து விவேகமுடன் செயல் படுவது நன்மை தரும். எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் கவன த்துடன் வைப்பது நல்லது. தொழில் வியா பாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக் கும். எந்த ஒரு வேலையையும் அதிக முயற்சி செய்து முடிக்க வேண்டி இருக் கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமுடன் பணியாற்றுவது நல்லது.


கடகராசி அன்பர்களே! ஆராய் ந்து செய்யும் காரியங்கள் சாதக மான பலன் தரும். ஆயுதங்கள் கையாளும் போதும் வாகனங் களை ஓட்டும் போதும் எச்சரி க்கை அவசியம். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். ஆனால் பணவரத்து திருப்திகரமாக இருக் கும். வாடிக்கையாளர்களின் கருத்துக்களு க்கு மதிப்பு கொடுப்பது நன்மை தரும். வியாபார ஸ்தலத்திற்காக புதியதாக இடம் வாங்குவீர்கள்.


சிம்மராசி அன்பர்களே! மனதில் ஏதாவது கலக்கம் ஏற்படும். காரணமே இல்லாமல் வீண் பழி சுமக்க நேரிடும். ஒதுங்கி சென் றாலும் வலிய வந்து சிலர் சண்டை போடலாம் தொழில் வியாபாரத்தில் திடீர் போட்டி இருக்கும். உத்யோகத்தில் இருப் பவர்கள் அதிகம் பணியாற்றுவதால் உடல் சோர்வடைய நேரலாம். வேலை செய்யும் இடத்திலும் மேலதிகாரிகளிடமும் வீண் பேச்சுக்களை தவிர்ப்பது நல்லது.


கன்னிராசி அன்பர்களே! எதிலும் முன்னேற்றம் காணப்படும். உடல் ஆரோக்கியம் பெறும். வீட்டை விட்டு வெளியில் தங்க நேரலாம். தொழில் வியாபாரத்தில் முன்னே ற்றம் காணப்படும். பல தடைகளை தாண்டி செயல்பட வேண்டி இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களின் செயல் திறமை வெளிப்படும். சுதந்திரமாக செயல் படும் வாய்ப்பு கிடைக்கும். வரவேண்டிய பணம் வந்து சேரும். குடும்பத்தில் இரு ந்த பிரச்னை குறையும்.



துலாம்ராசி அன்பர்களே! ஏதா வது ஒரு வகையில் நன்மை நடை பெறும். மற்றவர்கள் செய்கைகளால் மனவருத்தம் உண்டாகலாம். நீண்டநாள் இழுபறியாக இருந்து வந்த பிரச்னை முடிவுக்கு வரும். தொழில் வியாபாரத்தில் இருந்து வந்த பின்தங்கிய நிலை மாறும். உத்தி யோகத்தில் இருப்பவர்கள் சாமர்த்தியமாக செயல்பட்டு மேல் அதிகாரிகளின் பாராட்டு களை பெறுவார்கள்.குடும்பத்தில் அமைதி குறைவது போல் தோன்றும் சகோதரர்கள் வழியில் ஏதாவது பிரச்னை தலை தூக்க லாம்.



விருச்சிகராசி அன்பர்களே! குறிக் கோள் இன்றி வீணாக அலைய நேரிடும். செலவும் அதிகரிக்கும். சகோதரர்கள் மூலம் நன்மை உண்டாகும். மனோதைரியம் கூடும். புதிய நட்பு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத தடங்கல்கள் வரலாம். புதிய வாடிக்கையாளர்கள் கிடைக்க பெறுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் நினைத்ததை சாதிக்க வேண்டும் என்ற வேகத்தில் பணி புரிவார்கள். சிலருக்கு புதிய பதவி புதிய பொறுப்புகள் கிடைக்க பெறுவார்கள்.




தனுசுராசி அன்பர்களே! காரியங் களில் தாமதமான போக்கு காணப்படும். உங்கள் வார்த்தை க்கு வெளிவட்டாரத்தில் மதிப்பு அதிகரிக்கும். உங்கள் பேச்சு வெறும் பேச்சு போல் மற்றவர்கள் நினைப்பார்கள். அதனால் அளவுடன் பேசுவது நல்லது. உங்களது உடமைகளை கவனமாக பார் த்துக் கொள்வது நல்லது. வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் வேகமான போக்கு காணப் படும்.


மகரராசி அன்பர்களே! பல வகைகளிலும் நன்மை உண்டா கும். இழுபறியாக இருந்த சில வேலைகள் சாதகமாக நடந்து முடியும். பணவரத்து அதிகரிக் கும். தெளிவான முடிவு எடுப்பதன் மூலம் பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கும். ˚. கடினமான வேலைகள் கூட சுலபமாக முடியும். தொழிலில் மரியாதையும், அந்தஸ் தும் அதிகரிக்கும். அரசாங்கம் தொடர் பான விவகாரங்களில் சாதகமான போக்கு காணப்படும


கும்பராசி அன்பர்களே! காரியத் தடை தாமதம் நீங்கும். வழக்கு விவகாரங்கள் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும். எதிர்ப்புகள் விலகும். பொருளாதாரம் உயரும். நினைத்த காரி யத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பீர் கள். தாமதமான காரியங்கள் வேகம் பிடிக் கும். வீண்கவலை விலகும். அடுத்தவர் விஷயங்களில் தலையிடுவதை தவிர்க்கவும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் பார் ட்னருடன் அனுசரித்து செல்வது நல்லது


மீனராசி அன்பர்களே! எதிர் பார்த்த காரிய வெற்றி உண் டாகும். புத்திசாதுரியத்தால் எதையும் செய்து முடிக்க முடி யும். அனுபவபூர்வமான அறிவுத்திறன் கை கொடுக்கும். பணவரத்து தாமதப்படும். மற்றவர்களுடன் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நன்மைதரும். தொழில் வியா பாரம் தொடர்பான சில முக்கிய முடிவுகள் எடுக்க நேரிடும். உத்தியோகத்தில் இருப்ப வர்கள் சக ஊழியர்களுடன் கவனமாக பழகுவது நல்லது.


வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.


# கனடாவை அதிர வைத்த கொலையாளி அதிரடியாகக் கைது!



கனடாவின் **Saskatchewan** பிராந்தியத்தில் 11 பேர் படுகொலைக்கு காரணமான முக்கிய குற்றவாளி கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்பு அறிவித்துள்ளது. ளுயளமயவஉாநறயெ பிராந்தியத்தில் **Rosthern** பகுதியில் மறைந்திருந்த மயில்ஸ் சாண்டர்சன் சிக்கியுள்ளதாகவும், உள்ளூர் நேரப்படி சுமார் 3.30 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை காலை முதல் பிராந்தியத்தில் அமுலில் இருக்கும் பொது மக்களுக்கான அவசர எச்சரிக்கையின் ஒருபகுதியாக குறித்த தகவல் வெளியிடப் பட்டுள்ளது. இதனையடுத்து, அவசர எச்சரிக்கை ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும், பொதுமக்கள் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை எனவும் இதனால் தெரிவிக்க ப்பட்டுள்ளது. புதன்கிழமை பிற்பகல் ஒருவர் கத்தியுடன் வாக்கா பகுதியில் காணப் பட்டதாக அவசர எச்சரிக்கை விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும், திருடப்பட்ட வாகனம் ஒன்றில் மயில்ஸ் சாண்டர்சன் பயணப்பட்டதாகவும், அந்த வாகனம் புதன்கிழமை பிற்பகல் 2.10 மணியளவில் திருடப்பட்டதாகவும், ஆனால் அவர் பயணத்தின் நோக்கம் தெரியவில்லை எனவும் பொலிசார் குறிப் பிட்டுள்ளனர்.

ஞாயிறன்று முன்னெடுக்கப்பட்ட கொடூர தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட்டு ள்ளதுடன் 19 பேர்கள் காயங்களுடன் தப்பியுள்ளனர். இந்த தாக்குதல் சம்பவத்தில் சகோதரருடன் ஈடுபட்ட மயில்ஸ் சாண்டர்சன் மீது மூன்று பிரிவுகளில் முதல் நிலை கொலை வழக்கு பதியபட்டுள்ளது. விசாரணை தொடங்கிய பின்னர் அவர் மீது மேலும் பல பிரிவுகளில் வழக்கு பதியப்பட வாய்ப்புள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# அமெரிக்காவில் இந்தியருக்குக் கிடைத்த கௌரவம்!



அமெரிக்காவின் நியூயார்க் நீதிமன்ற நீதிபதியாக இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவரை தேர்வு செய்து ஜனாதிபதி ஜோபைடன் (**Joe Biden**) அறிவித்துள்ளார். அமெரிக்காவின் நியூயார்க் தெற்கு மாவட்ட நீதிபதியாக அமெரிக்க வாழ் இந்தியரான அருண் சுப்பிரமணியனை ஜனாதிபதி ஜோபைடன் பரிந்துரைத்துள்ளார். இது தொடர்பான நீதித்துறை நியமனங்கள் வெள்ளை மாளிகையால் செனட் சபைக்கு அனுப்பப்பட்டது.

இந்த நியமனம் செனட் சபையால் உறுதி செய்யப்பட்டால் நியூயார்க் தெற்கு மாவட்ட கோர்ட்டில் பணியாற்றும் முதல் தெற்காசிய நீதிபதி அருண் சுப்பிர மணியன் என்ற சிறப்பை பெறுவார். 2006 முதல் 2007-ம் ஆண்டு வரை அமெரிக்க சுப்ரீம் கோர்ட்டில் நீதிபதி ரூத்பேடர் கின்ஸ்பர்க்கின் சட்ட எழுத்தராக பணி யாற்றினார். அமெரிக்க மாவட்ட நீதிபதியாக பரிந்துரை செய்யப்பட்டுள்ள அருண் சுப்பிர மணியனுக்கு தேசிய ஆசிய பசிபிக் அமெரிக்க பார் அசோசியேஷன் வாழ்த்து தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:



Vilosanan Sivatharman
Funeral Director
416-993-0826

- Vistation
- Funeral & Memorial Service
- Reception
- Burial • Cremation

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

EMOTIONAL BENEFITS
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

வீடு மற்றும் வாகன காப்புறுதி
HOME & AUTO INSURANCE

| வீடு | வாகனம் | மோட்டர் சைக்கிள் | படகு | கனரக வாகனம் |
| --- | --- | --- | --- | --- |
| HOME | AUTO | MOTOR CYCLE | BOAT | TRAILER |

காப்புறுதித் தேவைகளுக்கும், விபரங்களுக்கும் அழையுங்கள்





TR
FORTUNE FAVOURS THE BOLD

CALL NOW FOR A QUOTE!
THUSHANTHAN RAVINDRAN
647-401-2653







இந்த இடத்தில்
விளம்பரம் செய்ய அழையுங்கள்
416 841 9600







